




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ டிசம்பர். 31, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 87 ❖ ரூ.10


## ஆளுநர் ஆர்.என்.ரவியுடன் முதல்வர் மு.க. ஸ்டாலின்

# சந்திப்பு

## நிலுவையில் உள்ள பல்வேறு கோப்புகள், மசோதாக்களுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்கவேண்டும்: முதல்வர்

## மாநில நலனை கருத்தில் கொண்டு அவ்வப்போது சந்தியுங்கள் : ஆளுநர்

**சென்னை , டிச. 31–**

**தமிழக ஆளுநர் ஆர். என்.ரவியுடன் தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் நேற்று ஆலோசனை நடத்தினர். இந்தச் சந்திப்பின்போது, நிலுவையில் உள்ள பல்வேறு கோப்புகள், மசோதாக்களுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று ஆளுநரிடம் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தினார். அதேவேளையில், மாநில நலனை கருத்தில் கொண்டு முதல்வருடன் அவ்வப்போது சந்திப்புகள் நடைபெற வேண்டிய அவசியத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி வலியுறுத்தினார்.**



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 'தமிழக அரசின் சார்பில் அனுப்பப்பட்ட மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் தமிழக ஆளுநர் நிலுவையில் வைத்திருப்பது தொடர்பாக, ஆளுநருக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடுத்திருந்தது. அவ்வழக்கில், ஆளுநரிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பாக முதல்வருடன் ஆலோசனை நடத்திட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்ததன் அடிப்படையில், முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆளுநர் அழைப்பினை ஏற்று, தமிழக முதல்வர் நேற்று ஆளுநர் மாளிகையில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆகியோருடன் ஆளுநரைச் சந்தித்தார். ஆளுநருடனான இச்சந்திப்பின்போது, பல மாதங்களாக ஆளுநரிடம் நிலுவையில் இருக்கும் பல்வேறு கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று ஆளுநரிடம் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தினார்.

அதேபோன்று, தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த 10 முக்கியமான மசோதாக்களை, அரசியல் சாசனத்தில் எங்கும் குறிப்பிடாத வகையில், தேவையின்றி குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பிவைத்துள்ளதைத் திரும்பப் பெற்று, அவற்றுக்கும் விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திடவும் ஆளுநரை முதல்வர் கேட்டுக் கொண்டார்.

ஊழல் வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ள அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.சி. வீரமணி மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு தொடர அனுமதி கோரி அனுப்பப்பட்ட கோப்புகளும் பல மாதங்களாக ஆளுநர் வசம் நிலுவையில் உள்ளன. அவற்றுக்கும் விரைந்து ஒப்புதல் வழங்க இச்சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது. இதில் கே.சி.வீரமணி தொடர்பான கோப்பினை 15 மாதங்களுக்கு மேலாகவும், எம். ஆர்.விஜயபாஸ்கர் தொடர்பான கோப்பினை 7 மாதங்களுக்கு மேலாகவும் ஆளுநரிடம் நிலுவையில் உள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் காலியாக உள்ள உறுப்பினர் பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பான கோப்பும், நீண்ட காலமாக ஆளுநரிடம் நிலுவையில் உள்ளது குறித்தும் தெரிவிக்கப்பட்டு அவற்றுக்கு ஒப்புதல் அளித்து திரும்ப அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப் பட்டது.

பொதுவாக, அரசியல் சாசன விதிகளுக்குட்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டுமென்றும், அப்போதுதான் மாநில மக்களின் நலனுக்கும், நிர்வாகத்திற்கும் பயனளிக்கக்கூடிய வகையில் ஆளுநர் செயல்பாடு அமையும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுநரிடம் எடுத்துரைத்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பின் ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'முதல்வர் மு.க.ஸ்டாலினை மாநில அரசு விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்கும் சந்திப்புக்கு ஆளுநர் ஆர். என்.ரவி அழைத்திருந்தார். அதன்படி, முதல்வர் ஸ்டாலின் ஆளுநரை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு சுமுகமாக இருந்தது. ஆளுநரும் முதல்வரும் பரஸ்பரம் மரியாதையை பரிமாறிக் கொண்டு, மாநிலம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். தமிழக மக்களின் நலனில் தாம் முழு ஈடுபாட்டைக் கொண்டிருப்பதாக ஆளுநர் மீண்டும் வலியுறுத்தினார். இந்திய அரசியலமைப்பின் வரம்புக்குஉட்பட்டு மாநில அரசுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாகவும் அவர் உறுதியளித்தார். மாநிலத்தின் மிகப் பெரிய நலனை கருத்தில் கொண்டு முதல்வருடன் அவ்வப்போது சந்திப்புகள் நடைபெற வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

## அயோத்தியில் புதுப்பிக்கப்பட்ட ரயில் நிலையத்தை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

அயோத்தி : டிச. 31–

அயோத்தியில் 240 கோடி ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட ரயில் நிலையத்தையும், 1,450 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள விமான நிலையத்தையும் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.



உத்தரப்பிரதேசத்தின் அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோவில் கும்பாபிஷேகம் ஜனவரி 22ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அயோத்தி ராமர் கோவில் நாட்டின் மிகப் பெரிய கலாச்சார மையமாகத் திகழும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகம் மற்றும் அதனைத் தொடர்ந்து அயோத்திக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என்பதால், அங்கு ஏற்கனவே சிறிய அளவில் இருந்த ரயில் நிலையம் ரூ.240 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 3 மாடிகள் கொண்ட இந்த புதிய ரயில் நிலையத்தில், மின் தூக்கிகள், எஸ்கலேட்டர்கள், உணவகங்கள், உடைகளை மாற்றும் அறைகள், குழந்தைகளுக்கான கவனிப்பு அறைகள் காத்திருப்பு அறைகள் என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ரயில் நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார். திறப்பு விழாவில், உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யாநாத், ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதையடுத்து, ரயில்வே வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகளை பிரதமர் மோடி பார்வையிட்டார். அயோத்தியின் பெருமையை பறைசாற்றும் வண்ணம் அயோத்தி ரயில் நிலையத்தில் வண்ணங்கள், ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதை பிரதமர் மோடி பார்வையிட்டார். அப்போது, ரயில் நிலையத்தின் சிறப்புகள் குறித்து யோகி ஆதித்யாநாத்தும், அஷ்வினி வைஷ்ணவும் பிரதமர் மோடிக்கு விளக்கினர்.

இதையடுத்து, அயோத்தி ரயில் நிலையத்தில் இருந்தவாறு இரண்டு புதிய அதிவேக அம்ரித் பாரத் ரயில்களையும், 6 புதிய வந்தே பாரத் ரயில்களையும் பிரதமர் மோடி கொடி அசைத்து தொடங்கிவைத்தார். முன்னதாக, அயோத்தி ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த அம்ரித் பாரத் ரயிலுக்குள் ஏறி, அதனை ஆய்வு செய்தார். மேலும், ரயிலில் இருந்த பள்ளி மாணவர்களோடு அவர் கலந்துரையாடினார்.

இதையடுத்து, அயோத்தியில் உள்ள மத்திய அரசின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் சிலிண்டர் பெற்ற 10வது கோடி பயனாளியின் வீட்டுக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அங்கு அவர்களோடு கலந்துரையாடினார். மேலும், அவர்கள் வீட்டில் டீ அருந்தினார். இதையடுத்து, அயோத்தியில் உள்ள லதா மங்கேஷ்கர் சவுக்கிற்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு கட்டப்பட்டுள்ள மிகப் பெரிய வீணை முன் நின்றவாறு பொதுமக்களைப் பார்த்து கைகளை அசைத்தார். முன்னதாக, அயோத்திக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடியை ஆளுநர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யாநாத் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்கள். இதனையடுத்து, அங்கிருந்து அவர் அயோத்தி ரயில் நிலையத்துக்கு காரில் சென்றார். அப்போது வழிநெடுகிலும் ஏராளமான தொண்டர்களும் பொதுமக்களும் திரண்டு வந்து அவரை வரவேற்றனர். பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மூலமும் பிரதமர் மோடிக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. காரின் உள்ளே இருந்து கொண்டு கைகளை அசைத்தவாறு பயணித்த பிரதமர் மோடி, ஒரு கட்டத்தில் காரில் இருந்து கீழே இறங்கி அதன் படிகளில் நின்றுகொண்டு மக்களைப் பார்த்து கைகளை அசைத்து அவர்களின் வரவேற்பை ஏற்றார். பலர், அவர் மீது பூக்களைத் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச. 31–

ரூ.393 கோடியே 74 லட்சம் மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் புறநகர் பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.




சென்னை கோயம்பேடு மற்றும் புறநகர் பகுதியில் உள்ள ஜி.எஸ்.டி. சாலைகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையிலும், தென் மாவட்டங்களுக்கு செல்லும் பொதுமக்கள் எளிதாக பயணத்தை மேற்கொள்வதற்காகவும் வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கரில், சுமார் 59.86 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.393 கோடியே 74 லட்சம் மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் புறநகர் பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்திற்கு கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த பேருந்து நிலையத்தில் கடந்த 12ம் தேதி 100க்கும் மேற்பட்ட பேருந்துகளை இயக்கி முதற்கட்ட சோதனை ஓட்டம் நடைபெற்ற நிலையில் நேற்று திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார். பேருந்து நிலைய கல்வெட்டு மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி சிலையையும் முதலமைச்சர் திறந்து வைத்தார். பின்னர் பேட்டரி காரில் அமர்ந்தபடி பேருந்து நிலையத்தை பார்வையிட்டார்.

இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் சேகர்பாபு, கடந்த ஆட்சியில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தொடர்பாக 30 சதவீத பணிகள் மட்டுமே முடிவடைந்தது. 70 சதவீத பணிவுகள் இந்த ஆட்சியில் முடிக்கப்பட்டது. சிறு மழை பெய்தாலே குளம் போல் தண்ணீர் தேங்கி நின்றது. அதனை 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் பணி மேற்கொள்ளப்பட்டது. எட்டு கிலோ மீட்டர் அளவிற்கு முழுமையான சாலை அமைக்கப்பட்டது. ஆறு ஏக்க நிலப்பரப்பில் ரூபாய் 11 கோடி ரூபாய் செலவில் அழகிய பூங்கா அதேபோல் 16 ஏக்கர் நிலவரத்தில் 13 கோடி காலநிலை பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. முழுமையாக இந்த பேருந்து நிலையம் செயல்பட்டு வந்தால் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் பயணிகள் பயணிப்பார்கள். 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஸ்கைவாக் பணி நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

## நெல்லை, தூத்துக்குடியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1,500 பேருக்கு நடிகர் விஜய் நேரில் உதவி

திருநெல்வேலி , டிச. 31–

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1500 பேருக்கு நிவாரண உதவிகளை நடிகர் விஜய் வழங்கினார்.



திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 17, 18-ம் தேதிகளில் பெய்த அதிகனமழையால் பல்வேறு இடங்களை வெள்ளம் சூழ்ந்தது. தாமிரபரணி கரையோர பகுதிகளில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்ததால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களும் தனித்தீவுகளாக மாறியிருந்தன. வெள்ளத்தில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

தற்போது இரு மாவட்டங்களிலும் இயல்புநிலை திரும்பிவரும் நிலையில் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ளவர்களுக்கு ரேஷன் அட்டை அடிப்படையில் தலா ரூ.6 ஆயிரம் மற்றும் 5 கிலோ அரிசி, மற்ற வட்டாரங்களில் உள்ளவர்களுக்கு தலா ரூ.1000 நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் நிவாரண பொருட்களையும் வழங்கி வருகிறார்கள்.

இந்நிலையில், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பாளையங்கோட்டை கேடிசி நகரிலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நடிகர் விஜய் பங்கேற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கினார். நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இரு மாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் 1,500 பேருக்கு டோக்கன் வழங்கப்பட்டு, அவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

தூத்துக்குடி வெள்ளப்பெருக்கின் போது பாத்திமா நகரை சேர்ந்த ராபின் சிங் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். அவரது குடும்பத்தினரை போனில் தொடர்பு கொண்டு ஏற்கனவே விஜய் ஆறுதல் தெரிவித்திருந்தார். ராபின் சிங் குடும்பத்தினருக்கு ரூ.1 லட்சம் நிவாரண நிதியை விஜய் வழங்கினார்.

இதுபோல் வீடுகளை இழந்த வள்ளி, இசக்கி ஆகியோருக்கு தலா ரூ.50 ஆயிரம், சங்கரன் என்பவருக்கு ரூ.25 ஆயிரம் மற்றும் வீடுகள் சேதம் அடைந்ததில் பாதிக்கப்பட்டுள்ள 30 பேருக்கு தலா ரூ.25 ஆயிரம் ரொக்கத்தையும் விஜய் வழங்கினார்.

மேலும் 5 கிலோ அரிசி, சர்க்கரை, ரவை, கோதுமை, சேமியா, உப்பு உள்ளிட்ட மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் வேட்டி, சட்டை, துண்டு ஆகியவற்றை 1,500 பேருக்கு விஜய் வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு வடை, பாயாசத்துடன் விருந்தும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை முடித்து கொண்டு மண்டபத்திலிருந்து விஜய் கிளம்பியபோது புகைப்படம் எடுக்க பலர் முண்டியடித்தனர். இதனால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் சிலருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிகிறது.

## காசா மீது இஸ்ரேல் சரமாரி தாக்குதல் 24 மணி நேரத்தில் 200 பேர் பலி

டெல் அவில் , டிச. 31–

காசா மீது இஸ்ரேல் ராணுவம் சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது. காசாவுக்குள் நுழைந்து ஹமாஸ் சுரங்கப்பாதை வளாகத்தை அழித்ததுள்ளது இஸ்ரேல். அதோடு கடந்த 24 மணி நேரத்தில் 200 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



இஸ்ரேல் வெள்ளிக்கிழமை இரவு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகர் மீது கடுமையான குண்டுகளை வீசிதாக்குதல் நடத்தியுள்ளது. காசாவுக்குள் நுழைத்து ஹமாஸ் சுரங்கப்பாதை வளாகத்தை அழித்துள்ளது இஸ்ரேல். அதோடு கடந்த 24 மணி நேரத்தில் 200 பேர் கொல்லப்பட்டனர். மேலும், பல உடல்கள் சுற்றுப்புறங்களின் இடிபாடுகளில் புதைந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. மத்திய காசாவில் உள்ள நுசிராட் முகாம் மீது இஸ்ரேல் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக மருத்துவர்கள் மற்றும் பாலஸ்தீன பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வாரின் வீடு ஒன்றின் அடித்தளத்தில் உள்ள சுரங்கப்பாதை வளாகத்தை அழித்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அல்-குத்ஸ் தொலைக்காட்சியில் பணிபுரிந்த பாலஸ்தீனஊடகவியலாளர் ஒருவர் தனது குடும்பத்துடன் சேர்ந்து கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது. இஸ்ரேலிய தாக்குதலில் 106 பாலஸ்தீன ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி தொடங்கிய ஹமாஸ் - இஸ்ரேல் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இஸ்ரேல் மீது ஹமாஸ் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. பாராக்ளைடர்கள் மூலம் இஸ்ரேலுக்குள் நுழைந்து கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம் சுட்டு வீழ்த்தினர். இதுவரை இஸ்ரேலியர்கள் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் காசாவில் இதுவரை 21,507 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று

**31-12-2023**

சுப வருடம் 1945 பௌஷம் 10

சோபகிருது மார்கழி 15 | DEC - SUN ஞாயிறு | ஜமா அத்துல் ஆகிர் 17 | 365 / 000

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | மேன்மை |
| ரிஷபம் | வியோகம் |
| மிதுனம் | உற்சாகம் |
| கடகம் | பெருமை |
| சிம்மம் | அன்பு |
| கன்னி | இன்சொல் |
| துலாம் | புகழ் |
| விருச்சி | வெற்றி |
| தனுசு | செலவு |
| மகரம் | வருத்தம் |
| கும்பம் | பக்தி |
| மீனம் | ஆர்வம் |

நல்லநேரம் காலை 7.45-8.45 10.45-11.45, மாலை 3.15-4.15 1.30-2.30

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நேர்மை தவறாமல்
வாழ்பவர்களை விட...
நேரத்திற்கு தகுந்தாற்போல்
வாழ்பவர்களே நிம்மதியாய்
வாழ்கிறார்கள்...


புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை- 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,820 | Rs. 6,290 |


# புதுக்கோட்டை பாராளுமன்ற தொகுதி மீண்டும் வேண்டும் ஊரக வளர்ச்சி துறை ஓய்வூதியர்கள் சங்கத்தில் தீர்மானம்



புதுக்கோட்டை , டிச. 31-

ஊரக வளர்ச்சி துறை ஓய்வூதியர்கள் சங்க பொதுக்குழு கூட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட தலைவர் ஓய்வுபெற்ற திட்ட இயக்குநர் கண்ணன் தலைமையில், ஓய்வு பெற்ற திட்ட இயக்குநர் ஏவிசிசி கணேசன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. மாநில தலைவர் மணிவண்ணன், துணைதலைவர் பழனியாண்டி, பொதுச் செயலாளர் முத்தையா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

"குடும்ப உறுப்பினர்கள் குறிப்பேடு" என்கிற பல்வகைபயன் நிறைந்த குறிப்பேட்டை ஏவிசிசி கணேசன் வெளியிட்டு, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவுப்பரிசுகள் வழங்கி சால்வை அணிவித்தார்.

முன்னதாக சமூக செயற்பாட்டாளர் நடிகர் விஜயகாந்த் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் கேந்திர வித்யா பள்ளி திறப்பது,புதுக்கோட்டை பாராளுமன்ற தொகுதியை மீண்டும் அமைக்க வலியுறுத்துவது, மானாமதுரை மார்க்கத்தில் திருச்செந்தூருக்கு புதிய ரயில் இயக்குவது,மூத்த குடிமக்களுக்கான ரயில்வே சலுகைகளை மீண்டும் வழங்குவது, சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது,ஓய்வூதியர் குறை தீர்ப்பது உள்ளிட்ட 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட செயாலார் பிடிஓ கண்ணன் தீர்மானவ்களை முன்மொழிந்தார். துணை பிடிஓ பொருளாளர் சின்னப்பா வரவு, செலவு அறிக்கை தாக்கல் செய்தார்.ஓய்வுபெற்ற திட்ட இயக்குநர் அழகிரிசாமி அனைவரையும் வரவேற்க, ஓய்வுபெற்ற மகளிர் திட்ட இயக்குநர் சத்யபாலன் நன்றி கூறினார்.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை முன்னிட்டு

# அய்யாபுரம் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்தும் 53-ம் ஆண்டு மின்னொளி கபாடி போட்டி



தென்காசி, டிச. 31- தென்காசி மாவட்டம், புளியங்குடி அய்யாபுரத்தில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை முன்னிட்டு அய்யாபுரம்ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்தும் 53 ஆம் ஆண்டு மின்னொளி கபாடி போட்டி நடைபெற்றது.

ஊர் நாட்டாமைகள், கே.பவுன்ராஜ், நகராட்சி ஆணையாளர் அய்யாபுரம், வடிவேல்புரையாற்றினர். விஜயா சௌந்தரபாண்டியன் சேர்மன் புளியங்குடி, ஏ.அந்தோணிசாமி துணை சேர்மன், ஜி.வெங்கடேசன் துணை காவல் கண்காணிப்பாளர், புளியங்குடி, எம். பாலகிருஷ்ணன் காவல்துறை ஆய்வாளர் முன்னிலை வகித்தனர். தனுஷ் எம் குமார் எம்பி தென்காசி, சதன் திருமலை குமார் எம்எல்ஏ வாசுதேவநல்லூர், எம். செல்லத்துரை முன்னாள் மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், வே. ஜெயபாலன் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர், ஏ. ஆனந்தன் வெளிநாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு பாரதிய ஜனதா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ராஜா ஈஸ்வரன் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தலைமையேற்று போட்டியை துவக்கிவைத்தார். கபாடி போட்டியில் மாவட்ட, மாநில அணிகளில் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு 2022-2023 ஆம் ஆண்டில்முதல், இரண்டாம் இடம் பிடித்த பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசு பொருளும், ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

மேலும் நிகழ்ச்சியில் பழனி நாடார் எம்எல்ஏ, ரவிசங்கர் அமிர்தஜோதி சந்திரசேகர் ஐஏஎஸ், ராஜன் வருமான வரித்துறை ஆணையாளர், நாகூர் கனி மதுரை காமராசர் யூனிவர்சிட்டி பேராசிரியர், மனோகரன் முன்னாள் எம்எல்ஏ, ரவிச்சந்திரன் அரசு ஒப்பந்ததாரர், எஸ்.டி. முருகேசன், எஸ்டி கல்வி குழுமம், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், உமா மகேஸ்வரி, அருணாசலம் செட்டியார், அரசு ஒப்பந்ததாரர், டிடிவி பிரேம்குமார் சேம்பர் சங்கரன்கோவில், பொன் முத்தையா பாண்டியன், ஒன்றிய குழு தலைவர், முப்பன் ஹபீப்பூர் ரஹ்மான், மணத்தி கணேசன், முன்னாள் இந்திய கபாடி வீரர், ராஜ் குட்டி எ.இ.கடையநல்லூர் ஆகியோர் கலந்து கொண்டனர். முதல் பரிசு ரூ. 30,000 ராஜா எம்எல்ஏ வழங்கினார். ராஜகோபால் கிரேஸ், குழல் கோப்பை வழங்கினார், ஏ.ஆனந்தன் பாஜகமாநிலதுணைத்தலைவர், இரண்டாம் பரிசு ரூ. 25000 வழங்கினார். தேவேந்திரன் நினைவாக எலிசபெத், கிதியோன் அய்யாபுரம், சுழற் கோப்பை வழங்கினர். மா. செல்லத்துரை முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் மூன்றாம் பரிசு ரூ. 20000 ஆயிரம் வழங்கினார். மேலும் வெற்றி பெற்ற வீரர்களுக்கு 16 பரிசுத் தொகைகளும் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.


கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437




தேமுதிக நிறுவனரும், முன்னாள் எதிர்கட்சி தலைவருமான சமூகசேவையின் சித்தர், கேப்டன் விஜயகாந்த் அவர்களது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அமரடக்கி புன்னகை அறக்கட்டளை சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் ஒன்றியம், அமரடக்கி ஏரிகரையில் ஆலமரம், புங்கன், மரகன்று நடும் நிகழ்ச்சியில் நிறுவனர் தலைவர் ஆ.சே.கலைபிரபு, கலைமணி, அழகுகூத்தையா, சிரஞ்சிவி, பாக்கியராஜ், ராஜ்க்குமார், ரவிக்குமார் கலைச்செல்வன், துரைமாணிக்கம் மற்றும் பலர் கலந்துகொண்டு மரக்கன்றை ஏரிக்கரையில் நட்டு கேப்டன் விஜயகாந்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

# எம்பி ரஞ்சன் குமார் பிறந்தநாள் நிகழ்ச்சி கொண்டாட்டம்



தென்காசி : டிச. 31, தென்காசி மாவட்டம், இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்டத் தலைவர், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் ஆணைக்கிணங்க, தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக எம்பி ரஞ்சன் குமார், எஸ்சி,எஸ்டி, பிரிவு மாநில தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு, தென்காசி எஸ்சி துறை மாவட்ட தலைவர் பி.ராமச்சந்திரன் புதிய பேருந்து நிலையத்தில் பயணம் செய்த பயணிகளுக்கு லட்டு வழங்கி பிறந்தநாள் நிகழ்ச்சியை கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் காசி பாண்டியன் வழக்கறிஞர் அணி தலைவர், மாவட்டத் துணைத் தலைவர்கள் ராஜா திலகம், மணி செம்பூர், தென்காசி நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், தென்காசி மாவட்ட செயலாளர் பரமசிவன் என்ற மணி, மாவட்ட பொருளாளர் தாவீது, மாவட்ட ஊடகத்துறை தலைவர் வெங்கடேசன், தென்காசி தொகுதி தலைவர்கள் தங்கராஜ், ஆலங்குளம், கோடீஸ்வரன், கடையநல்லூர், ஜெகன்வாசு, மகேஷ் குமார், தென்காசி நகரத் தலைவர் மாரியப்பன், கடையநல்லூர் வட்டாரத் தலைவர்கள், கதாநாயகன், செங்கோட்டை ஈஸ்வரன், சிவகிரி நகரத்தலைவர் வெள்ளைச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கறம்பக்குடியில் தார் சாலை அமைக்க கோரி சாலைமறியல் போராட்டம் 100 பேர் கைது



கறம்பக்குடி : டிச. 31-

கறம்பக்குடி அருகே திருமணஞ்சேரி செல்லும் குண்டும் குழியுமான தார் சாலையை அப்புறப்படுத்தி புதிய தார் சாலை அமைத்திட கோரி அப்பகுதியை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருமணஞ்சேரி ஆர்ச் முன்பு புதுக்கோட்டை, கறம்பக்குடி சாலையில் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 100 பேரை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்தனர். புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே திருமணஞ்சேரி கிராமம் உள்ளது. இந்த கிராமம் அருகே பட்டத்திக்காடு, கருக்காகுறிச்சி, வாணக்கன்காடு உள்ளிட்ட 10-கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். அது மட்டுமின்றி திருமணஞ்சேரியில் புகழ்பெற்ற பழமை வாய்ந்த ஸ்ரீ சுகந்த பரிமளேஸ்வரர் கோயில் உள்ளது. இந்த கோயிலுக்கு தினசரி நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். கறம்பக்குடி திருமணஞ்சேரி விலக்கு சாலையில் இருந்து வாணக்கண்காடு வரை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. தரமற்ற முறையில் சாலை அமைக்கப்பட்டதால் குண்டும் குழியுமாக ஜல்லி கற்கள் பெயர்ந்து இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நான்கு வருடத்திற்குள் இரண்டு முறை தார் சாலையை பழுது பார்த்துள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அவசர காலங்களில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் 108 ஆம்புலன்ஸ் கூட செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த சாலையில் தெரு விளக்குகள் சரிவர அமைக்கப்படாததால் இருள்சூழ்ந்துஇரவுநேரங்களில் பெண்கள் செல்வதற்கு அச்சமடைந்து வருகின்றனர். மேலும் கறம்பக்குடியில் இருந்து அறந்தாங்கி செல்லக்கூடிய அரசு பேருந்து இந்த வழித்தடத்தில் சென்று வருகிறது. குண்டும் குழியுமான சாலையால் அரசு பேருந்து குறித்த நேரத்தில் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை மனுக்கள் அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதியை சேர்ந்த 100கும் மேற்பட்ட பொதுமக்கள் கறம்பக்குடி திருமணஞ்சேரி ஆர்ச் முன்பு புதுக்கோட்டை, கறம்பக்குடி சாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.சாலை மறியலில் ஈடுபட்டவ்களிடம் கறம்பக்குடி காவல் ஆய்வாளர் செந்தூர் பாண்டியன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் உடன்பாடு ஏற்படாததால் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 100 பேரை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# கறம்பக்குடியில் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம்



கறம்பக்குடி : டிச. 31, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, வெட்டன்விடுதி அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு வட்டார மருத்துவ அலுவலர் பஜ்ரூல் அகமது தலைமை வகித்தார். சுகாதார ஆய்வாளர் சிதம்பர ராஜா வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் முத்துராஜா கலந்துகொண்டு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். முகாமில் சர்க்கரை அளவு, இசிசி, பல் மருத்துவம், கண் பரிசோதனை, பிசியோதெரபி, ஆயுர்வேதா உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு மருத்துவ்களின் ஆலோசனை வழங்கப்பட்டது. பரிசோதனையில் மருத்துவரின் ஆலோசனைபடி மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன், ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராஜேந்திர துரை, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மாரிமுத்து, தலைமையாசிரியர் வின்சென்ட், வட்டாரா சுகாதார மேற்பார்வையாளர் சிவப்பிரகாசம், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்குமார் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி இறுதியில் சுகாதார ஆய்வாளர் பரதன் நன்றி கூறினார்.

# கீழப்பழுவூர் மீரா மகளிர் கல்லூரி மாணவிக்கு மாநில விருது



அரியலூர் : டிச. 31, அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் மீரா மகளிர் கல்லூரி மாணவிக்கு மாநில விருது கிடைத்துள்ளது. இது பற்றி கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பு:

மாணவர் பருவத்திலேயே நாட்டில், தன் சுற்றுவட்டாரத்தில் ஏற்படும் சுற்றுச்சூழல் மாற்றத்தை கருத்தில் கொண்டு, அதை சீர்படுத்த வேண்டி செயல்பட்டு வரும், மீரா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் இளங்கலை மூன்றாமாண்டு பயின்று வரும் மாணவி ம.மகாதேவிக்கு, எழுதிரள் வழங்கும் 'தமிழ் மாணவர் விருதுகள் 2023', மாநில அளவில் சுற்றுச்சூழலியல் மாணவர் விருதினையும், பரிசு தொகையாக ரூபாய் பத்தாயிரமும் பெற்றுள்ளார். விருது பெற்ற மாணவியை, கல்லூரி தாளாளர் எம்.ஆர். கமல்பாபு மற்றும் முதல்வர் முனைவர் ஆகியோர் வாழ்த்தி பாராட்டினர்.

# அரியலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்







அரியலூர் : டிச. 31, அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 727.69 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 2044 மெ.டன் யூரியா, 687 மெ.டன் டி.ஏ.பி 700 மெ.டன் பொட்டாஷ்; மற்றும்; 2517 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள்; வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் 194 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 340 மெ.டன் என கூடுதலாக 534 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 33 மெ.டன்; நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது என, மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார். இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் தீபாசங்கரி, வேளாண்மை இணை இயக்குநர் பாலையா, வேளாண் துறை அலுவலர்கள் அரசு அலுவலர்கள், விவசாயிகள் மற்றும்பொதுமக்கள்உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "ராமரை வேட்பாளராக அறிவிப்பது மட்டுமே மிச்சம்" - பாஜகவை சாடிய சிவசேனா





புதுடெல்லி : டிச. 31, அயோத்தி ராமர் கோயில் விஷயத்தை அரசியல் ஆக்குவதாக பாரதிய ஜனதா கட்சியை சாடியுள்ள சிவ சேனா (உத்தவ் தாக்கரே அணி) கட்சி எம்.பி. சஞ்சய் ரவுத், "வரும் மக்களவைத் தேர்தலில் ராமரை பாஜக வேட்பாளராக அறிவிப்பது மட்டுமே மிச்சமுள்ளது" என்று விமர்சித்துள்ளார்.

அயோத்தியில் விமான நிலையம், ரயில் நிலையத்தை திறந்து வைப்பதற்காக பிரதமர் மோடி அங்கு செல்வதற்கு முன்பாக சஞ்சய் ரவுத் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நேற்று கூறுகையில், "வரும் மக்களவைத் தேர்தலில் ராமரை பாஜக வேட்பாளராக அறிவிப்பது மட்டுமே மிச்சமுள்ளது. அந்த அளவுக்கு ராமர் கோயில் விவகாரம் அரசியலாக்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

முன்னதாக, ஜனவரி 22-ம் தேதி நடைபெற இருக்கும் ராமர் கோயில் திறப்பு விழா, தேசிய விழா இல்லை அது பாஜக விழா என்று அவர் தெரிவித்திருந்தார். சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே ராமர் கோயில் திறப்புவிழாவில் கலந்து கொள்வாரா என்ற கேள்விக்கு பதில் அளித்த சஞ்சய் ரவுத், "நிச்சயமாக தாக்கரே கலந்து கொள்வார். ஆனால், பாஜகவின் நிகழ்ச்சிகள் முடிந்த பின்பே கலந்து கொள்வார். பாஜக நிகழ்வில் ஒருவர் ஏன் கலந்து கொள்ள வேண்டும். இது தேசிய நிகழ்ச்சி இல்லை. ராமர் கோயில் விழா தொடர்பாக பாஜக பேரணிகள், பிரச்சாரங்கள் நடத்துகின்றன. ஆனால் அதில் தூய நிலைப்பாடு எங்கே இருக்கிறது" என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

# விஜயகாந்துக்கு மணிமண்டபம் தமிழக அரசுக்கு பிரேமலதா கோரிக்கை





சென்னை : டிச. 31, தேமுதிக தலைவர் விஜயகாந்த் நினைவிடத்தில் நேற்று முதல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தலாம் என்றும் விரைவில் பிரம்மாண்டமான நினைவிடம் அமைக்கப்படும் என்றும் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நேற்று அவரது மனைவி, மகன்கள் மற்றும் குடும்பத்தினர் சடங்குகள் செய்து மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா விஜயகாந்த், "கேப்டன் செய்த தர்மம் அவரது தலையை காக்கும் என்பது போல லட்சக்கணக்கான தொண்டர்கள் அவரது இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றார்கள். அவர்கள் அனைவருக்கும் கேப்டன் சார்பாக நன்றிகள். முதல்வர், ஆளுநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகள்.

கேப்டன் நினைவிடம் பிரம்மாண்டமாக கட்டப்படும். அவரது புகைப்படம் வைத்து 24 மணி நேரமும் விளக்கு ஏற்றப்பட்டு, தினமும் பூ அலங்காரம் செய்து பூஜை செய்யப்பட்டு, ஒட்டுமொத்த தொண்டர்களும் வந்து வழிபடும் கோயிலாக மாற்ற இருக்கிறோம்.

கேப்டனின் லட்சியத்தை வென்று எடுப்பதுதான் எங்களுடைய நோக்கம். அவருக்கு மணிமண்டபம் கட்ட அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். நினைவிடத்தில் மக்கள் அஞ்சலி செலுத்த எந்த கட்டுப்பாடும் இல்லை" என்று கூறினார்.

## சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் லால்பேட்டை பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் துவக்கி வைத்தார்



காட்டுமன்னார் கோவில் டிச 31–

கடலூர் மாவட்டம் லால்பேட்டை பேரூராட்சியில் சனிக்கிழமை மக்களுடன் முதல்வர் திட்டத்தின் துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.சிந்தனைசெல்வன் தலைமை தாங்கி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். செயல் அலுவலர் தங்கவேல் வரவேற்றார். பேரூராட்சி தலைவர் பாத்திமா ஹாரிஸ், துணைத் தலைவர் அன்வர் சதாத்,ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பொதுமக்களிடமிருந்து பட்டா மாற்றம், குடும்ப அட்டை பெயர் திருத்தம், மின்வாரிய பெயர் திருத்தம், உள்ளிட்ட 18 துறைகளைச் சார்ந்த மனுக்கள் பெறப்பட்டது.

நிகழ்ச்சியில் தாசில்தார் தமிழ்செல்வன், நில எடுப்பு தனி வட்டாட்சியர் ஜெயச்சந்திரன், துணை தாசில்தார் சங்கர், வட்ட வழங்கல் அலுவலர் அன்புராஜ் ,வருவாய் ஆய்வாளர் சீனிவாசன், கல்விக்குழு தலைவர் சோழன், கோவிந்தசாமி, மணவாளன்,கஸ்பா பாலா, ஜெயக்குமார் ,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வெள்ள நிவாரணம் வழங்கல்



சங்கரன்கோவில் : டிச. 31, தமிழகத்தின் முதலமைச்சர் உத்திரவின்படி சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் குருக்கள்பட்டி, கே.ரெட்டியபட்டி, மேலநீலிதநல்லூர், கீழநீலிதநல்லூர், இலந்தைகுளம், பெரியகோவிலான்குளம், பனவடலிசத்திரம், ஆயாள்பட்டி கிராமங்களில் உள்ள நியாய விலை கடைகளில் தமிழக முதல்வர் அறிவித்தபடி வெள்ள நிவாரணத் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார். தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு கே.ரெட்டியப்பட்டியில் உள்ள நியாய விலை கடையில் வெள்ள நிவாரணத்தை வழங்கி துவக்கி வைத்தார். தொடர்ந்து மற்ற கிராமங்களில் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

இதில் மாவட்ட பிரதிநிதிகள் சண்முகப்பாண்டியன், செந்தூர்பாண்டியன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகாராஜன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் தனசேகரன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முத்துப்பாண்டியன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் மனோகரன்,கிளை செயலாளர்ரகள் நாகராஜன், சுகுமாரன், காசிப்பாண்டியன், பரமையா, முத்துராமலிங்கம், எம்.துரை, வரதராஜன், ராஜேந்திரன், கனகராஜ், குமார், பாலமுருகன், திலிப் மற்றும் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் மனோஜ்குமார், ஒன்றிய சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முத்துப்பாண்டியன், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் கார்த்திக், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கபாஸ்கர், ஆத்மா, சேர்மன், கணேசன், முருகன்,குருசாமி,முத்துக்குட்டி, ராமர்பாண்டியன், தீபா, செல்வன் ராஜேந்திரன், பால்சாமி, நீலகண்டன், சிவலிங்ககுமார், பொன்னுபாண்டியன், வெள்ளத்துரை, முருகன், கருப்பசாமி ,சௌந்தர்ராஜன், சௌந்தர்,கற்கரை,கணபதிசாமி, மாடசாமி, அய்யாதுரை, முத்துக்குமார் மற்றும் கூட்டுறவு சங்க செயலாளர்கள் மணிப்பாண்டியன், கருப்பசாமி, செந்தூர்பாண்டியன், நியாய விலை கடை ஊழியர்கள் செல்வி, செல்லத்துரை, சுப்பையாபாண்டியன், ரவி, சீனிவாசன், செல்லத்துரை, விஜயா, பிரபாகரன், சரவணன், சங்கீதா, மீனா, செல்வி செல்லதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த 5 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கல்



சென்னை, டிச. 31–

புதுக்கோட்டையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த 5 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். விபத்தில் பலத்த காயமடைந்தோருக்கு தலா ரூ. 1 லட்சம், லேசான காயமடைந்தோருக்கு தலா ரூ. 50,000 வழங்க முதல்வர் உத்தரவிட்டிருந்ததன் படி நிதி வழங்கப்பட்டது.

இதுகுறித்து முதல்வர் வெளியிட்டிருந்த அறிக்கையில்;"புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா, நமணசமுத்திரம் அருகே திருச்சி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்து மூன்று வெவ்வெறு நான்கு சக்கர வாகனங்களில் வெவ்வேறு கோவிலுக்கு சென்றுக் கொண்டிருந்தவர்கள், தேநீர் அருந்துவதற்காக சாலையோரத்தில்வாகனங்களை நிறுத்திவிட்டு தேநீர் அருந்திகொண்டிருந்தபோது, சிமெண்ட் ஏற்றிகொண்டு வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, பனஞ்சேரியை சேர்ந்த ஜெகநாதன் (வயது 60) த/பெ.பாலன் மற்றும் சாந்தி (வயது 55), க/பெ.சீனிவாசன், திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயில், எல்லையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கோகுலகிருஷ்ணன் (வயது 26), த/பெ.ராமநாதன் மற்றும் சென்னை மாவட்டம், அமைந்தகரையைச் சேர்ந்த சதீஷ் (வயது 25), த/பெ. சக்திவேல் ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

மேலும் திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல், பாக்கியலட்சுமி நகர், அன்னை இந்திரா காந்தி தெருவைச் சேர்ந்த சுரேஷ் (வயது 39), த/ப.ஜெயராமன் என்பவர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை செய்ய அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டுலட்சம்ரூபாயும்,பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒருலட்சம்ரூபாயும்,இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என முதல்வர் தெரிவித்திருந்தார்.

அதன்படி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, புதுக்கோட்டை எம் எல் ஏ முத்துராஜா, ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை நேற்று வழங்கினார்கள்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலாம் கனவு இந்தியா இயக்கம் மற்றும் டாக்டர் ராஜேஷ் கலாம் கனவு இந்தியா கல்வி மற்றும் பொதுநல அறக்கட்டளை மற்றும் காஞ்சி சிலம்பக்கலை பயிற்சி மையம் சார்பில் விஜயகாந்த் இறப்பிற்கு வீரக்கலையுடன் வீரவணக்கம் மற்றும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது இதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் கலாம் கனவு இந்தியா இயக்க தலைவர் டாக்டர் ராஜேஷ் கலாம் மற்றும் காஞ்சி சிலம்பக்கலை குரு குமார் மற்றும் தேவராஜ் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு சிலம்பக்கலை மூலம் வீரவணக்கம் மற்றும் மௌன அஞ்சலி செலுத்தினர்

## "மோடி பிரதமரான பிறகுதான் இந்தியா மீதான உலகின் பார்வையே மாறியது" – அமித்ஷா விவரிப்பு



அகமதாபாத் : டிச. 31, சுதந்திரத்துக்குப் பிறகு நரேந்திர மோடி பிரதமராகும் வரை, நாட்டின் பார்வை 'இந்தியாவை மையமாக' கொண்டிருக்கவில்லை என்று நாட்டை நேசிப்பவர்கள் உணர்வதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சுவாமிநாராயண் குருகுல விஸ்வவித்யா பிரதிஷ்டாணம் நடத்திய பூஜ்ய புராணி சுவாமி ஸ்மிரிதி மகோத்ஸ்வத்தில் கலந்து கொண்டு பேசிய அமித்ஷா. "நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டை நேசித்தவர்களுக்கு, பாரதம் என்ற வார்த்தை மீது மரியாதை கொண்டவர்களுக்கு ஒரு மிகப் பெரிய வருத்தம் இருந்தது. அது, நாடு சுதந்திரம் அடைந்தாலும் அதன் பார்வை நாட்டை மையப்படுத்தியதாக இல்லாமல், வேறு எதையோ மையப்படுத்தியதாக இருக்கிறதே என்பதுதான்.

இந்த பார்வையை மாற்ற 1950 முதல் பாஜகவினர் பாடுபட்டார்கள். பல தலைமுறைகளாக பாஜக இதற்காக பாடுபட்டு வந்தது. இந்த நோக்கத்துக்காக பலர் தங்கள் இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். நரேந்திர மோடி பிரதமரான பிறகுதான் இந்தப் பார்வை மாறியது. அதன் பிறகு ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவின் புகழை பாடத்தொடங்கின. நாடு தற்போது பலதுறைகளில் முன்னேறி வருகிறது.

மொபைல் ஃபோன் உற்பத்தியில் நமது நாடுதான் முதலிடத்தில் உள்ளது. புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்படுவதில் நாம் 3-வது இடத்தில் இருக்கிறோம். இதேபோல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியிலும் நாம் 3-வது இடத்தில் உள்ளோம். ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370, பிரவினைவாதத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் காரணமாக இருந்தது. பல பத்தாண்டுகளாக அதன் சுமைகளை நாடு சுமந்து கொண்டிருந்தது. ஆகஸ்ட் 5, 2019 அன்று பிரதமர் நரேந்திர மோடி சட்டப்பிரிவு 370ஐ முடிவுக்கு கொண்டு வந்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான சகிப்புத்தன்மையற்ற கொள்கையை மோடி அரசு கொண்டிருக்கிறது. நமது எல்லையில் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தவர்களை சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் மூ லம் நாம் உறுதியாக எச்சரித்தோம். இந்தியாவின் பாதுகாப்புப் படையுடன் மோதினால், கடும் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் என்ற அந்த எச்சரிக்கையை சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் மூலம் பிரதமர் மோடி கொடுத்தார்" என்று அமித் ஷா தெரிவித்தார்.

## சமுக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு

### சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைசெல்வன் பங்கேற்பு



கடலூர் , டிச. 31–

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா தனியார் திருமண அரங்கில் நடைபெற்றது. குத்துவிளக்கு ஏற்றி துவக்க பட்ட நிகழ்வில் சுமார் 135 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசையுடன் சமுதாய வளைகாப்பு நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரை ஜெயமாலதி (குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ) தலைமை சஃபியாபர்வீன் (ஒன்றிய பெருந்தலைவர்) முன்னிலை பழனி (மாவட்ட திட்ட அலுவலர் ) வாழ்த்துரை காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் மற்றும் முத்துசாமி பேரூராட்சி மன்றத் தலைவர் கணேசமூர்த்தி ராமலிங்கம் வட்டார மருத்துவர் வெங்கடேசன் குழந்தைகள் வளர்ச்சி திட்ட வட்டார ஒருங்கிணைப்பாளர் டெமெட்ராமேரி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் மணவாளன் விவசாய பாதுகாப்பு சங்க மாநில செயலாளர் பசுமைவளவன் நகர பொருளாளர் கஸ்பாபாலா வானமாதேவிராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சமுதாய வளைகாப்பு எம் ஆர் கே கல்வி குழுமத்தின் சார்பாக அனைத்து கர்ப்பிணி பெண்கள் மற்றும் உறவினர்களுக்கு அறுசுவை மதிய உணவு அளிக்கப்பட்டது

## காஞ்சிபுரம் சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மார்கழி மாத பாவை விழா



காஞ்சிபுரம் டிச. 31–

மார்கழி மாத சிறப்பையும், மரபையும் எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் வகையில், காஞ்சிபுரம் ஏனாத்தூர் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் இருளை நீக்கி எனும் தலைப்பில், திண்ணை பள்ளிக்கூடத்தின், பாவை விழா வெள்ளிக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் டாக்டர். கலை இராம. வெங்கடேசன் தலைமையில், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளாசியுடன், ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்பாள் கோயில் ஆஸ்தான வித்துவான்கள் தேசூர் சகோதரர்கள் ஸ்ரீ எஸ். சண்முகசுந்தரம், ஸ்ரீ எஸ். சேதுராமன் குழுவினரின் மங்கல இசை நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கான பாட்டு போட்டி, பேச்சுப்போட்டி, ஓவிய போட்டி, கோல போட்டி மற்றும் வினாடி வினா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் நூதன ஆண்டாள் விக்கிரகத்திற்கு சிறப்பு பூஜையும், தீபாராதனையும் நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருப்பாவை காட்டும் வாழ்க்கை நெறிகள் என தலைப்பில் சமஸ்கிருத பேராசிரியர் டாக்டர். ஜே. ஸ்ரீ சைலம் சிறப்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து நடைபெற்ற பரதநாட்டிய கலை நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் - சென்னை ஸ்ரீ பால சேஷேத்ராலையா வித்வ சபையின், ஆடல் கலைமணி தனலட்சுமி பாலமணிகண்டன் கலந்து கொண்டு நடனம் ஆடினார். அதைத் தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தலைவர் டாக்டர். வி.பி.குமார் கிருஷ்ணன், செயலாளர் டாக்டர். வி. பி. ரிஷிகேஷன், கல்லூரி முதல்வர் டாக்டர். கலை. இராம. வெங்கடேசன் ஆகியோர் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

## காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் கல்வியல் கல்லூரியில் தேசிய நுகர்வோர் தின விழா



காரைக்கால் , டிச. 31–

காரைக்கால் மாவட்டத்தில் தேசிய நுகர்வோர் தினத்தை முன்னிட்டு பெருந்தலைவர் காமராஜர் கல்வியல் கல்லூரியில் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் குடிமைப் பொருள் வழங்கள் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை மூலமாக தேசிய நுகர்வோர் தின விழா நடைபெற்றது.

இந்திகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமை ஏற்று கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் பயிற்சி ஆட்சியர் சம்யக் எஸ். ஜெயின் துணை இயக்குனர் குடிமை பொருள் வழங்கல் சச்சிதானந்தம் மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை சங்கங்களின் வழக்கறிஞர் திருமுருகன் மற்றும் செயலாளர் சிவக்குமார் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

மேலும் காரைக்காலில் அமைந்துள்ள ஆறு கல்லூரிகளில் நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தேறியது. கருத்தரங்கில் பங்கு பெற்ற மாணவ மாணவிகளுக்கும் கட்டுரை போட்டிகள் வைக்கப்பட்டு முதல் மூன்று இடம் பிடித்த மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் பரிசினையும் சான்றிதழ்களையும் வழங்கினார். விழாவின் ஏற்பாடுகளை குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அதிகாரிகள் செய்திருந்தனர்.

## சிலம்பப்போட்டியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்



புதுக்கோட்டை, டிச. 31–

ஸம்ஸ்க்ருத வித்தியாலயா ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத்தின் சார்பாக மாணவர்களுக்கு சிலம்பப்போட்டி நடந்தது. அப்போது சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சங்கத் தலைவர் மாருதி கண. மோகன்ராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் செயலாளர் இப்ராஹிம் பாபு பேசுகையில்; வருங்காலத்தில் மாணவர்கள் அரசின் அறிவுறுத்தல் படி வாகன உரிமத்தின் அவசியம் குறித்தும் வாகன காப்பீடு உயிர்க்காப்பீடு ஆகியவைகள் ஏன் எதற்கு எடுக்க வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினார். நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினரும், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத்தின் துணைத் தலைவருமான சேட் (எ)அப்துல் ரஹ்மான் மற்றும் குழிபிறை ஊராட்சி மன்ற தலைவர் அழகப்பன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு

இளையதலைமுறையினர் சாலை விதிகளை கடுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் சாலைகளில் வாகனங்களை நிறுத்துவதை தவிர்த்தல் வேண்டும் என்றும், ஓட்டுனர் உரிமம் பெற்ற பிறகு மாணவர்கள் இருசக்கர வாகனங்களை ஓட்ட வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்,

விழாவின் முன்னதாக வருகை தந்த அனைவரையும் பள்ளியின் நல்லாசிரியர் விருது பெற்ற உடற்கல்வி ஆசிரியர் முத்துராமலிங்கம் வரவேற்றார். பள்ளி மாணவர் சூர்யா நன்றி கூறினார் இந்த நிகழ்வில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வீரடிவிநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி விழா



ஆதனக்கோட்டை, டிச.31–

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள குப்பையன்பட்டி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வீரடிவிநாயகர் ஆலயத்தில் மார்கழிமாத மஹாசங்கடகர சதுர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த சங்கடஹர சதுர்த்தி விழாவில் விநாயகருக்கு சந்தனா தைல அபிஷேகம், திரவியபொடி,பால், தயிர், அரிசிமாவு, பஞ்சாமிர்தம் சந்தன, இளநீர், பன்னீர் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் விநாயகர் அலங்கரிக்கப்பட்டுதீபாராதனை காட்டப்பட்டது. இந்த சங்கடஹர சதுர்த்தி விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## மதுரை பெத்தானியாபுரம் அருகே துப்பாக்கியை சுத்தப்படுத்தும் போது திடீரென வெடித்ததில் ஓய்வுபெற்ற ராணுவ வீரர் உயிரிழந்துள்ளார்

*மதுரை : டிச. 31, மதுரை பெத்தானியாபுரம் அருகே துப்பாக்கியை சுத்தப்படுத்தும் போது திடீரென வெடித்ததில் ஓய்வுபெற்ற ராணுவ வீரர் உயிரிழந்துள்ளார்.*

*ஓய்வு பெற்ற ராணுவ வீரர் ராஜேந்திரன் தனியார் வங்கியில் பாதுகாவலராக பணிபுரிந்து வந்தார். துப்பாக்கியை காவல் நிலையத்தில் ஒப்படைப்பதற்காக சுத்தம் செய்த போது எதிர்பாராத விதமாக ராஜேந்திரன் சுட்டுக் கொண்டார். வயிற்று பகுதியில் பாய்ந்த குண்டு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே உயிர் பிரிந்தது.*



*விபத்தா? தற்கொலையா? என்ற கோணத்தில் கரிமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மதுரை பெத்தானியாபுரம் தாமஸ் விதியை சேர்ந்தவர் ராஜேந்திரன் இவர் முன்னாள் ராணுவ வீரராவார். ராணுவத்தில் 23 வருடமாக பணிபுரிந்து வந்துள்ளார். தற்போது ஓய்வு பெற்று தனியார் வங்கியில் காவலராக பணியாற்றி வந்தார்.*

*இந்நிலையில் தனியார் வங்கியில் கடந்த 20 நாட்களாக வேலைக்கு செல்லாத நிலையில் அவர் வைத்திருந்த துப்பாக்கியை காவல் நிலையத்தில் ஒப்படைப்பதற்காக நேற்று காலை தனது வீட்டு மொட்டைமாடியில் துப்பாக்கியை சுத்தம் செய்ய முயற்சித்தபோது, தவறுதலாக அவருடைய கைப்பட்டு அவருடைய வயிற்று பகுதியை நோக்கி சுட்டுக்கொண்டதாக தகவல்வெளியாகியுள்ளது. சத்தத்தை அறிந்து அவருடைய குடும்பத்தார் ரத்த வெள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்த அவரை மீட்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள், வழியில் சென்றுகொண்டிருக்கும் போதே அவர் உயிரிழந்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.*

# மங்கைநல்லூரில் நவீன பொது கழிப்பிடம் திறப்பு



தரங்கம்பாடி, டிச.31:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், மங்கை நல்லூர் ஊராட்சி மயிலாடுதுறை -திருவாரூர் சாலை பேருந்து நிலையம் அருகில் நவீன பொது கழிப்பிடம் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய குழு தலைவர் மகேந்திரன் தலைமை வகித்தார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் எஸ். அன்பரசன் வரவேற்று பேசினார்.

இதில் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பொது நிதி 2022-23 மற்றும் 15 வது மத்திய நிதிக்குழ மானியத்தின் கீழ் ரூ.11 லட்சத்து 94 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய நவீன பொது கழிப்பிட கட்டடத்தை திறந்து வைத்து பேசினார். இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள் மங்கை சங்கர், ஏ.ஆர்.ராஜா, எம். அப்துல்மாலிக், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உமாசங்கர், கஜேந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர் ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜேஷ் கண்ணன், தங்கமணி, சதீஷ், அறிவழகன், மதிவாணன், நெடுமாறன் மற்றும் வர்த்தக சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். உதவி பொறியாளர் சோமசுந்தரம் நன்றி கூறினார்.

# அம்புலி ஆற்றை தூர்வாரும் பணியை தடுத்ததைக் கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல்



ஆலங்குடி : டிச. 31, ஆலங்குடியில் அம்புலி ஆற்றை தூர்வாரும் பணி தடுக்கப்பட்டதைக் கண்டித்து பொதுமக்கள் நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் அம்புலி ஆறு தூர்வாரும் பணி அண்மையில் தொடங்கி நடைபெற்று வருகிறது. அப்பணி ஆலங்குடி பேரூராட்சி 14-வது வார்டுக்கு உள்பட்ட அண்ணாநகர், இந்திராநகர் பகுதியில் அம்புலி ஆறு தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அம்புலி ஆற்றில் இருந்து கழிவு நீர் கல்லாலங்குடியில் உள்ள பெரியகுளத்திற்கு சென்றடையும் எனக்கூறி பாஜக சுற்றுச்சூழல் பிரிவு நிர்வாகி முருகேசன் தலைமையிலானோர் தூர்வாரும் பணியை தடுத்து நிறுத்தியுள்ளனர். இதைக் கண்டித்தும் தூர்வாரும் பணியை உடனே தொடங்க வேண்டும் என வலியுறுத்தியும் அண்ணாநகர், இந்திராநகர் பகுதி மக்கள் அம்புலி ஆற்று பாலம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்து சென்ற ஆலங்குடி போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தி மறியலில் ஈடுபட்டோரை கலைந்து போகச்செய்தனர். இதனால், ஆலங்குடி, மறமடக்கி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# குழிபிறை இராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் நாட்டு நலப்பணி திட்ட ஊர்வலம்




திருமயம் : டிச. 31, குழிபிறை மு.சித.இராம. இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி மாணவர்களால் நாட்டு நலப்பணி திட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பிளாஸ்டிக் பை ஒழிப்பு மற்றும் மஞ்சப்பை உபயோகம் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாணவர்களால் பேரணி நடத்தப்பட்டது. பேரணியை குழிபிறை நூலகர் நித்யா அவர்கள் துவங்கி வைத்தார்கள். தலைமையாசிரியர் க.கருப்பையா, ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் சண்முகம் மற்றும் காசி விஸ்வநாதன் கலந்து கொண்டார்கள். நூலகத்தைப் பற்றியும், நூலகத்தின் பயன்பாடுகள் பற்றியும் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் மற்றும் பயிற்சிகள் நூலகத்தில் வழங்கப்படுவதாகவும், அதை பயன்படுத்திக் கொள்ளுமாறும் நூலகர் நித்யா கேட்டுக் கொண்டார்கள். மாணவர்களின் களப்பணிகளையும் அவர்களின் சேவைகளையும்பாராட்டி பள்ளியின் செயலர் இராம.சொக்கலிங்கம் அவர்கள் மாணவர்களை கௌரவித்தார்கள். நெகிழிப்பை விழிப்புணர்வுபேரணியை திட்ட அலுவலர் பழனியப்பன் அவர்களும், வெங்கடாச்சலம் ஆசிரியர் அவர்களும் ஏற்பாடு செய்தனர்.

# தென்காசி மாவட்ட பொது நூலகத்துறை அலுவலர் ஒன்றிய நிர்வாகிகள் அறிமுக விழா



தென்காசி : டிச. 31, 103 ஆண்டுகள் பாரம்பரியமிக்க தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கமான தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் இணைப்புச் சங்கங்களின் முதன்மை சங்கமான தமிழ்நாடு அரசு பொதுநூலகதுறை அலுவலர் ஒன்றியத்தின் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுக விழா தென்காசி தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை அலுவலர் ஒன்றிய மாநில துணை பொதுச் செயலாளரும் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்ட தலைவருமான வெற்றி வேலன் தலைமை வகித்தார். மூத்த உறுப்பினர்களாகிய பிரம்ம நாயகம் முனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்ட செயலாளர் குமார் வரவேற்றார். மாநில தலைவர் அமிர்த குமார் புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்தும், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை அலுவலர் ஒன்றிய நாட்காட்டியையும் வெளியிட்டு விழா பேருரை ஆற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திருநெல்வேலி மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், தென்காசி மாவட்ட தலைவர் சுப்பிரமணியன், தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர் கோ.முத்துராமலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் மூத்த உறுப்பினர் எஸ்.பரமசிவன், செங்கோட்டை நூலகர் ராமசாமி, அரியபுரம் நூலகர் இளங்கோ, கடையம் நூலகர் மீனாட்சிசுந்தரம், பண்பொழி நூலகர் கிறிஸ்டிபாய், மந்தியூர் நூலகர் முத்துப் பாண்டியன், ஆலங்குளம் நூலகர் பழனிஸ்வரன், கடையநல்லூர் நூலகர் நாகராஜ், சங்கரன்கோவில் நூலகர் சிவக்குமார், பூலாங்குளம் நூலகர் குமார்ராஜா, அம்பை நூலகர் சதீஷ்குமார், பழவூர் நூலகர் திருக்குமரன் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர். பொது நூலகத்துறை அலுவலர் ஒன்றிய தென்காசி மாவட்ட தலைவராக பழனிஸ்வரன், மாவட்ட செயலாளராக சிவகுமார், மாவட்ட பொருளாளராக சி.நாகராஜ், திருநெல்வேலி மாவட்ட தலைவராக பே.குமார், செயலாளராக அகில முத்துக்குமார், பொருளாளராக திருக்குமரன், இதர நிர்வாகிகளும் இரு மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டனர். ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் அகிலமுத்துகுமார் நன்றி கூறினார்.



▶ தென்காசி மாவட்டம், சுரண்டையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடாரிடம், தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் அகர கட்டு லூர்து நாடார் தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் த.பி.சொக்கலால் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்களை சீரமைக்க கோரி கோரிக்கை மனுவினை நேரில் அளித்தார்.

### இந்தியாவுக்கு மோடி செய்தது என்ன?

# வரும் தேர்தல் இந்துத்துவாவுக்கும், மக்கள் நலனுக்கும் இடையேயானது

## காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் கருத்து



டெல்லி : டிச. 31-

வரும் தேர்தல் இந்துத்துவாவுக்கும் மக்கள் நலனுக்கும் இடையேயானது என்று காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜனவரி.22ல் அயோத்தியில் ராமர் கோயிலையும், பிப்ரவரி.14ல் அபுதாபியில் இந்துக் கோயிலையும் பிரதமர் திறந்து வைக்கிறார். 2 கோயில்களும் திறக்கப்பட்ட பின் இந்தியாவில் விரைவில் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கிறேன். 2009ல் பொருளாதார வளர்ச்சியின் அவதாரமாகவும் குஜராத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் மோடி காட்சிப்படுத்தப்பட்டார். அனைத்து இந்தியர்களுக்கும் மோடி வளர்ச்சியை கொண்டு வருவார் எனக் கூறப்பட்டது. 2019ல் பணமதிப்பிழப்பு என்ற பேரழிவுநடவடிக்கைக்குப் பின் மோடியின் கதை சரிந்தது. புல்வாமா தாக்குதல், மோடிக்கு பொதுத்தேர்தலை தேசிய பாதுகாப்பு தேர்தலாக மாற்றுவதற்கான வாய்ப்பை வழங்கியது.

2024ல் நரேந்திர மோடியை இந்துக்களின் இதய சக்கரவர்த்தியாக பாஜக முன்னிறுத்தும் என்பது தெளிவாகிறது. நீங்கள் இந்தியாவுக்கு செய்தது என்ன? என்பது போன்ற சில கேள்விகள் தற்போது எழுகின்றன. ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் என்ன ஆனது? பொருளாதார வளர்ச்சி என்ன ஆனது என்றும் கேள்வி எழுப்பினார். ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்குகளிலும் செலுத்தக் கூடிய வருமானம் என்ன ஆனது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# பெரிய அச்சத்தை தரும் வகையில் கொரோனா பாதிப்பு இல்லை

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



சென்னை : டிச. 31, பெரிய அச்சத்தை தரும் வகையில் கொரோனா பாதிப்பு இல்லை என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

பருவமழையை ஒட்டி சென்னையில் 10வது வார சிறப்பு மருத்துவ முகாம் தரமணியில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஜே.என்.1 என்ற புதிய வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது. தெற்காசிய நாடுகளில் ஜே.என்.1 கொரோனா வைரஸ் பாதிப்பு அதிக அளவில் காணப்படுகிறது. ஜே.என்.1 வகை கொரோனா தொற்று உள்ளவர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு இல்லை. புதிய வகை கொரோனா தொற்றுக்கு பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை.

புதிய கொரோனா உருமாற்றமானது அதிக அளவிலான கூட்டு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இணைநோய் உள்ளவர்கள், குழந்தைகள், முதியவர்கள் பொது இடங்களுக்கு செல்லும் போது முகக்கவசம் அணிய வேண்டும். 1.25 லட்சம் படுக்கை வசதி தயார் நிலையில் உள்ளது. 2,000 மெட்ரிக் டன் ஆக்சிஜனும் தயார் நிலையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.



▶ நாமக்கல் மாவட்டம், மோகனூர் பேரூராட்சி முத்துராஜா தெரு மாசடச்சியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஸ்குமார் பார்வையிட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார். உடன், கலெக்டர் உமா, சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமயம் இந்திய தேசிய காங்கிரஸ் 139வது துவக்க நாள் விழா



திருமயம் : டிச. 31, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் கடைவீதியில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் 139 வது துவக்க நாள் விழா தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ராமசுப்புராம் தலைமையில் கட்சி கொடியை ஏற்றி வைத்தார்கள்.

மாநில சிறுபான்மை பிரிவு ஒருங்கிணைப்பாளர் அக்பரலி, ஒன்றிய கவுன்சிலர் கணேஷ் பிரபு, வடக்கு வட்டார தலைவர் எம்.முருகேசன், தெற்கு வட்டார தலைவர் ராம.மணிகண்டன், மாவட்ட கலைப்பிரிவு பொதுச் செயலாளர் மேலூர் எம்.சிங்காரம், தெற்கு வட்டார மகளிர் அணி தலைவி தவமணி பாண்டி, நகரத் தலைவர் அன்பழகன், முன்னாள் வட்டார நகர நிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், திருமயம் வட்டாரத்தில் இருந்து வருகை தந்த காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர். வருகை தந்த கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராமசுப்புரம் 139 வது துவக்க நாளில் காங்கிரஸ் கட்சி 2024 காலண்டர்கள் வழங்கினார்.

# புதுக்கோட்டை டீம் மருத்துவமனை சார்பாக மழைக்கால மருத்துவ முகாம்



புதுக்கோட்டை

முதலமைச்சரின் மருத்துவ காப்பீடுதிட்டத்தின் கீழ் தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர்.கே.எச்.சலீம் வழிகாட்டுதலின்படி மழைக்கால மருத்துவ முகாம், புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம், தென்னங்குடி ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு தென்னங்குடி ஊராட்சி மன்ற தலைவர் செல்லமணி தலைமை தாங்கினார். இம்மருத்துவ முகாமில், தொற்றா நோய்களான சர்க்கரை நோய், இருதய நோய், புற்றுநோய், ஆஸ்துமா நோய் மற்றும் பல்வேறு நோய்கள் பற்றிய விழிப்புணர்வும், நோய் கண்டறியும் பரிசோதனையும் செய்யப்பட்டன.

தொற்றும் நோய்களால் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை பற்றியும், கொரோனா, டெங்கு, பன்றிக்காய்ச்சல், இன்ஃப்ளுயன்சா போன்ற வைரஸ் காய்ச்சலால் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையை அணுகி பரிசோதனை செய்து கொண்டு முறையாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்என்றும்தொற்று நோய்கள் பரவக்கூடிய இக்காலக்கட்டத்தில் குடிநீரை காய்ச்சி பருக வேண்டும், கை, கால்களை சுத்தமாக அடிக்கடி சோப்பு போட்டு கழுவ வேண்டும், மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் முககவசம் கட்டாயம் அணிய வேண்டும்என்று முகாமில் அறிவுறுத்தப்பட்டது.

இம்முகாமில் டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இருக்கை மருத்துவர் அறிவரசு அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கினார்.

இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர் ஜோசப், மக்கள் தொடர்பு அலுவலர் திரு. முத்துக்குமார், செவிலியர் கண்காணிப்பாளர் கனகா ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் திட்ட ஒருங்கிணைப்பாளர், பாண்டியராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# செம்பனார்கோவிலில் செம்மயில் உழவர் உற்பத்தியாளர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்




தரங்கம்பாடி, டிச.30:

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயிலில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பில் செம்மயில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி கலந்து கொண்டு சீர்காழி, செம்பனார்கோவில் ஒன்றியத்திற்கு உட்பட்ட 94 ஊராட்சிகளை சேர்ந்த 4300 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 35 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது:-

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மயிலாடுதுறை மாவட்டத்தில் செம்பனார் கோவில் வட்டாரத்தில் 57 ஊராட்சிகளிலும், சீர்காழி வட்டாரத்தில்37 ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரக தொழில் முனைவுகள் உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் நோக்கமாகும். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பில் செம்மயில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெறுகிறது.

செம்மயில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலோடு கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள செம்பனார்கோவில் சீர்காழி வட்டாரங்களை சார்ந்த 109 உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் விவசாயம் சார்ந்த 3270 உறுப்பினர்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் 400 பெண் பங்குதாரர்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செம்மயில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தற்போது கூடுதலாக 626 பெண் உறுப்பினர்களை இணைத்து மொத்தம் 1026 பங்குதாரர்களுடன் செயல்பட்டு வருகிறது.

உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் பங்குதாரர்கள் பயன்பெறும்வகையில்வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிக்காட்டுதலின்படி, உளுந்து மதிப்பு கூட்டு இயந்திரம், கால்நடை தீவனம் தயாரிக்கும் இயந்திரம், எண்ணெய் வகைகள் உற்பத்தி செய்யும் பால் கொள்முதல் போன்றவைகளை கொள்முதல் செய்து பால் உற்பத்தியை பெருக்கி செம்மயில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை முன்னோடி உற்பத்தியாளர் நிறுவனமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செம்மயில் விவசாய உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு வணிக வைப்பு நிதியாக ரூ.10 இலட்சமும், இணைமானிய நிதி மூலம் 15 நபர்களுக்கு ரூ.42 இலட்சமும், நுண் நிறுவன நிதி கடன் 100 நபர்கள் ரூ.39 இலட்சமும், சமுதாய திறன் பள்ளி மூலம் 200 நபர்களுக்கு ரூ.8.13 இலட்சமும், சமுதாயபண்ணை பள்ளி முலம் 4260 நபர்களுக்கு ரூ.28.00 இலட்சமும், சமுதாய பண்ணை பள்ளி முதன்மை பயிற்றுநர் வீரசுந்தரி மறைவு காரணமாக அவர்களுடைய மதிப்பூதியம் ரூ.5000 அவர்களின் கணவருக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், வாழ்ந்து காட்டுவோம் மாவட்ட செயல் அலுவலர் வேல்முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, மஞ்சுளா, வாழ்ந்து காட்டுவோம் திட்ட செயல் அலுவலர் இளநங்கையரசி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஊசி போட்டுக்கொண்டு உலகக்கோப்பையில் விளையாடிய முகமது ஷமி





**மும்பை : டிச. 31,**

**முகமது ஷமிக்கு நீண்டகால இடது குதிகால் பிரச்சினை உள்ளதாகவும், உலகக் கோப்பை போட்டிகளில் விளையாடுவதற்காக அவர் தொடர்ந்து ஊசி போட்டுக்கொண்டு ஆட்டத்தில் பங்கேற்றார் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.**

இந்திய அணியில் தற்போது சீனியர் வேகப்பந்துவீச்சாளர் முகமது ஷமிதான். 2015ம் ஆண்டு ஐசிசி உலகக் கோப்பையில் இருந்து 2023ஆம் ஆண்டு ஐசிசி உலகக் கோப்பை வரை இந்திய அணிக்காக சிறப்பாக விளையாடி வருகிறார்.

சமீபத்தில் நடந்து முடித்த உலகக்கோப்பைத் தொடரில் முதலில் சில போட்டிகளில் வாய்ப்பே கிடைக்காமல் ஷமி ஓரங்கட்டப்பட்டிருந்தார். ஹர்திக் பாண்டியாவிற்கு காயம் ஏற்பட்ட பிறகுதான் ஷமியை பிளேயிங் லெவனிலேயே எடுத்தார்கள். தாமதமாக வாய்ப்பு கிடைத்திருந்தாலும் கிடைத்த வாய்ப்பில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு இந்திய அணியின் வெற்றிகளுக்கு மிக முக்கிய பங்களிப்பைச் செய்திருந்தார்.

உலகக்கோப்பை தொடரில் 7 போட்டிகளில் விளையாடி24விக்கெட்டுகளை வீழ்த்தி அனைவரது பாராட்டுகளையும் பெற்றிருந்தார் ஷமி. தற்போது இந்திய அணி தென்னாப்பிரிக்காவிற்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்த டெஸ்ட் தொடருக்கான 16 பேர் கொண்ட இந்திய அணியில் முகமது ஷமியும் இடம் பெற்றிருந்தார். ஆனால் கணுக்கால் காயம் காரணமாக அவர் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் முகமது ஷமியின் காயம் குறித்து அவருக்கு நெருங்கிய முன்னாள் பெங்கால் அணி வீரர் ஒருவர் சிலதகவல்களைப் பகிர்ந்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது, "ஷமிக்கு நீண்டகாலமாக இடது குதிகாலில் பிரச்சினை உள்ளது. அவர் உலகக் கோப்பையின் போது வலிக்காக ஊசி போட்டுக் கொண்டுதான் விளையாடினார் என்பதும் பல போட்டிகளில் வலியுடன்தான் விளையாடினார் என்பதும் இங்குப் பலருக்குத் தெரியாது. வயதாக வயதாக ஒவ்வொரு காயத்திலிருந்தும் வலியிலிருந்தும் மீள்வது சிரமமாகவே இருக்கும்" என்றார்

இப்போது மட்டுமில்லை 2015ம் ஆண்டு உலகக் கோப்பை தொடரின்போதும், ஷமிக்கு முழங்கால் வீக்கம் இருந்தது. அவர் அறுவை சிகிச்சையை விடுத்து, இந்தியாவுக்காக விளையாட ஊசி போட்டு விளையாடினார் என்பதும் நினைவுக்கூரத்தக்கது. இந்த தகவலை ஷமியே ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

# பாலியல் வழக்கில் நேபாள கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சந்தீப் லாமிச்சானே குற்றவாளி : நீதிமன்றம்

**காத்மாண்டு : டிச. 31,**

**பாலியல் வழக்கில் நேபாள கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சந்தீப் லாமிச்சானே குற்றவாளி என காத்மாண்டு மாவட்ட நீதிமன்றம் அறிவித்துள்ளது. அவரது தண்டனை விவரம் விரைவில் வெளிவரும் என தெரிகிறது.**

23 வயதான சந்தீப் லாமிச்சானே மீது கடந்த ஆண்டுபாலியல் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. 17 வயது சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்தார் என்பது தான் அவர் மீதான குற்றச்சாட்டு. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த விவகாரம் தொடர்பாக அவரை கைது செய்வதற்கான வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. நேபாள கிரிக்கெட் சங்கம் அவரை இடைநீக்கம் செய்தது. கடந்த ஜனவரியில் அவர் பிணையில் வெளிவந்தார்.

இந்நிலையில், சந்தீப் லாமிச்சானே வழக்கு காத்மாண்டு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அதில் குற்றவாளி என்பது தெரியவந்தது. அதையடுத்து





வழக்கை விசாரித்த நீதிபதி அவர் குற்றவாளி என தீர்ப்பு வழங்கினார். தீர்ப்பு வெளிவந்த தினத்தன்று நேபாள புரோ கிளப் சாம்பியன்ஷிப் போட்டியில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தன் மீதான குற்றச்சாட்டை அவர் தொடர்ந்து மறுத்து வந்தார். அவர் பிணையில் வந்தவுடன் நேபாள அணிக்காக விளையாடும் வாய்ப்பை பெற்றார். ஆசிய கோப்பை மற்றும், உலகக் கோப்பை குவாலிபையர் தொடரிலும் விளையாடி வந்தார். சுமார் ஓராண்டுகாலம் அவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையில் இருந்து வந்தது. சர்வதேச தொடரில் விளையாடிய போதுஸ்காட்லாந்துவீரர்கள் அவருடன் கை குலுக்க மறுத்தனர்.

# "ஆயிரம் திறமைகள் இருந்தும் தோற்கும் அணி என்றால் அது இந்தியாவே"

## மைக்கேல் வான் விமர்சனம்

**மெல்போர்ன் : டிச. 31,**

**'இந்திய அணி நல்ல அணி, நிறைய திறமைகள் உள்ளன. ஆயிரம் திறமைகள் இருந்தும் ஆயிரம் வகைகள் இருந்தும்' இந்திய அணி வெற்றி பெறும் என்று நான் கருதவில்லை என்று இங்கிலாந்து முன்னாள் வீரர் மைக்கேல் வான் சாடியுள்ளார்.**

தென் ஆப்பிரிக்கா டெஸ்ட் தொடருக்கு எந்த ஒரு தயாரிப்பும் இல்லாமல் டி20, ஒருநாள் போட்டிக்கான அணியைக் கொண்டுசென்று திறமையான டெஸ்ட் வீரர்கள் ரஞ்சி அணியில் இருந்தும் தேவையில்லாமல் ஷுப்மன் கில், பிரசித் கிருஷ்ணா, ஷர்துல் தாக்கூர் ஆகியோரை தேர்வு செய்து செம சாத்து வாங்கி செஞ்சூரியன் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி படு இன்னிங்ஸ் தோல்வி அடைந்தது. ராகுல், கோலியைத் தவிர மற்ற பேட்டர்கள் சொதப்பினர். பவுலிங்கில் பும்ரா உட்பட அனைவரும் லெந்த்தை தேடினர். மாறாக தென் ஆப்பிரிக்கா பவுலர்கள் இதே பிட்சில் பந்துகளை ஸ்விங் செய்து இந்திய வீரர்களை நசுக்கினர்.

இந்நிலையில் ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற பாக்சிங் டே மெல்போர்ன் டெஸ்ட் போட்டியின் வர்ணனையில் இருந்த மைக்கேல் வான், மார்க் வாஹ் இந்திய அணி குறித்து விவாதித்தனர். அப்போது இந்திய அணி திறமைகள் இருந்தும் திறமைகளுக்குக் குறைவாக, மோசமாக டெஸ்ட் போட்டிகளை ஆடும் அணியாக இருக்கிறது என்றார் மைக்கேல் வான்.

மேலும் அவர் பேசுகையில், "சமீப காலங்களில் அவர்கள் அதிகம் வெற்றிகளைப் பெறவில்லை. திறமைக்குக் குறைவாக ஆடும் அணியாக உள்ளனர். அவர்கள் எதையும் வெற்றி பெறுவதில்லை. எப்போது இந்திய அணி வென்றது?. இத்தனை திறமைகள், வள ஆதாரங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு அவர்கள் நிறைய வெற்றிகளைப் பெற்றிருக்க வேண்டும். ஆஸ்திரேலியாவில் இருமுறை டெஸ்ட் தொடரை வென்றனர். அது அபாரம், அற்புதம். கடந்த சில உலகக் கோப்பைகளில் அவர்கள் எங்கும் வெல்லவில்லை. கடந்த சில டி20 உலகக் கோப்பைகளிலும் அவர்கள் எங்குமே இல்லை. இந்திய அணியிடம் என்ன இல்லை, திறமைக்குக் குறைவா, அல்லது வள ஆதாரங்களுக்குத்தான்





குறைவா?. இத்தனை இருந்தும் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள்." என்றார்.

தென் ஆப்பிரிக்காவில் அடைந்த தோல்வி இந்திய அணி மீது ரசிகர்களுக்கு கடும் அதிருப்தியை கிளப்பியுள்ளது. 3 நாட்களுக்குள் கதை முடிந்தது என்றால் என்ன டெஸ்ட் அணி இது? என்ற கேள்வியே நம்மைத் துளைக்கிறது. மைக்கேல் வான் விமர்சனத்தை ட்ரோல் செய்யக்கூடாது, அவர் கேட்கும் கேள்விகள் சரியானவை. உண்மையில் ஏன் இந்திய அணி இப்படி ஆடுகிறது? இவர்களுக்கு எதில் குறைவு? என்ற கேள்வி பிசிசிஐ கேட்க வேண்டிய கேள்வியாகும்.

வரலாறு சினிமா

# நெல்லை, தூத்துக்குடியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1,500 பேருக்கு நடிகர் விஜய் நேரில் உதவி



**திருநெல்வேலி : டிச. 31,**

**திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1500 பேருக்கு நிவாரண உதவிகளை நடிகர் விஜய் வழங்கினார்.**

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 17, 18-ம் தேதிகளில் பெய்த அதி கனமழையால் பல்வேறு இடங்களை வெள்ளம் சூழ்ந்தது. தாமிரபரணி கரையோர பகுதிகளில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்ததால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களும் தனித் தீவுகளாக மாறியிருந்தன. வெள்ளத்தில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

தற்போது இரு மாவட்டங்களிலும் இயல்பு நிலை திரும்பி வரும் நிலையில் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ளவர்களுக்கு ரேஷன் அட்டை அடிப்படையில் தலா ரூ.6 ஆயிரம் மற்றும் 5 கிலோ அரிசி, மற்ற வட்டாரங்களில் உள்ளவர்களுக்கு தலா ரூ.1000 நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் நிவாரண பொருட்களையும் வழங்கி வருகிறார்கள்.

இந்நிலையில், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பாளையங்கோட்டை கேடிசி நகரிலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நடிகர் விஜய் பங்கேற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கினார். நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இரு மாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் 1,500 பேருக்கு டோக்கன் வழங்கப்பட்டு, அவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

தூத்துக்குடி வெள்ளப்பெருக்கின்போது பாத்திமா நகரை சேர்ந்த ராபின் சிங் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். அவரது குடும்பத்தினரை போனில் தொடர்பு கொண்டு ஏற்கனவே விஜய் ஆறுதல் தெரிவித்திருந்தார். ராபின் சிங் குடும்பத்தினருக்கு ரூ.1 லட்சம் நிவாரண நிதியை விஜய் வழங்கினார்.

இதுபோல் வீடுகளை இழந்த வள்ளி, இசக்கி ஆகியோருக்கு தலா ரூ.50 ஆயிரம், சங்கரன் என்பவருக்கு ரூ.25 ஆயிரம் மற்றும் வீடுகள் சேதம் அடைந்ததில் பாதிக்கப்பட்டுள்ள 30 பேருக்கு தலா ரூ.25 ஆயிரம் ரொக்கத்தையும் விஜய் வழங்கினார்.

மேலும் 5 கிலோ அரிசி, சர்க்கரை, ரவை, கோதுமை, சேமியா, உப்பு உள்ளிட்ட மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் வேட்டி, சட்டை, துண்டு ஆகியவற்றை 1,500 பேருக்கு விஜய் வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு வடை, பாயாசத்துடன் விருந்தும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை முடித்து கொண்டு மண்டபத்திலிருந்து விஜய் கிளம்பியபோது புகைப்படம் எடுக்க பலர் முண்டியடித்தனர். இதனால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் சிலருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிகிறது.

# ஏலியனை நம்பி களத்தில் குதித்துள்ளோம் சிவகார்த்திகேயன் பேச்சு



**சென்னை : டிச. 31,**

**'இன்று நேற்று நாளை' படத்தை தொடர்ந்து ஆர்.ரவிக்குமார் எழுதி இயக்கியுள்ள படம், 'அயலான்'.**

இதில் சிவகார்த்திகேயன், ரகுல் பிரீத் சிங், கருணாகரன், யோகி பாபு, இஷா கோபிகர், பாலசரவணன், பானுப்பிரியா, ஷரத் கேல்கர் நடித்துள்ளனர். 2018ல் தொடங்கிய இப்படத்தை 24 ஏஎம் ஸ்டுடியோஸ், கேஜேஆர் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளன. நீரவ்ஷா ஒளிப்பதிவு செய்ய, ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வரும் ஜனவரி 12ம் தேதி திரைக்கு வரும் இப்படம் குறித்து சிவகார்த்திகேயன் பேசியதாவது:

திரையுலகில் அவரை முந்த வேண்டும், இவரை முந்த வேண்டும் என்ற எந்த போட்டி மனப்பான்மையும் எனக்கு கிடையாது. என்னால் முடிந்தளவுக்கு நல்ல கதை கொண்ட தரமான படங்களை ரசிகர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே லட்சியம், ஆசை. எனது படங்களில் அதிக ரத்தம் தெறிப்பது, துப்பாக்கி சத்தம் எழுவது, வன்முறை மற்றும் புகைப்பிடிப்பது, மது அருந்துவது போன்ற காட்சிகளை நான் விரும்புவது இல்லை. 'அயலான்' படத்தை அனைத்து தரப்பினரும் பார்த்து ரசிக்கலாம். ரத்தம், வன்முறை, துப்பாக்கி ஆகியவற்றை நம்பாமல், ஏலியனை மட்டும் நம்பி படமாக்கியுள்ளோம்.

ஆரம்பகாலத்தைப் போல் இப்போது நான் காதல் கதைகளில் அதிகமாக நடிக்கவில்லை என்றாலும், அதுபோன்ற கதைகளில் நடிக்க வேண்டும் என்ற ஆசை அதிகமாக இருக்கிறது. தற்போது அதுபோன்ற கதைகளைக் கேட்டு வருகிறேன். நீண்ட நாட்களாக எனக்குள் எழுந்த ஒரு கேள்வி, எனக்கு சம்பளம் வேண்டுமா? அல்லது 'அயலான்' படம் திரைக்கு வர வேண்டுமா என்பதாக இருந்தது. இப்படம் ஒரு தொலைநோக்குப் பார்வை. எங்களுக்குள் நாங்கள் நினைத்த விஷயங்களை, நம் மக்களுக்கு கண்டிப்பாக சொல்லியாக வேண்டும் என்ற எண்ணத்தில், பல்வேறு சிரமங்களைக் கடந்து இப்படத்தை திரையிடும் முயற்சியில் வெற்றிபெற்றுள்ளோம்.

நமது ஊரில் இவ்வளவு பெரிய பட்ஜெட்டில், மிகப் பிரமாண்டமான முறையில் ஒரு படத்தை உருவாக்க முடியும் என்று நிரூபிப்பதற்காகவே இப்படத்தை தொடங்கினோம். அப்போது பான் இந்தியா என்ற வார்த்தையே கிடையாது. 'பாகுபலி' முதல் பாகம் ரிலீசாகி இருந்தது. தமிழில் ஏன் இதுபோன்ற ஒரு படத்தை உருவாக்க முடியாது என்ற கேள்விக்கு பதிலாகவே 'அயலான்' படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படியொரு படத்தை துணிச்சலுடன் நாம் உருவாக்கினால், அந்த தைரியத்தில் இனிமேல் தமிழில் பல படங்கள் உருவாகும் என்ற நோக்கத்தில்தான் உருவாக்கினோம். துரதிர்ஷ்டவசமாக தயாரிப்பாளருக்கு நிறைய பிரச்னைகள் ஏற்பட்டது. இந்த தொலைநோக்குப் பார்வை நிறைவேற ஒரே வழி, 'எனக்கு சம்பளம் வேண்டாம். படத்தை எப்படியாவது ரிலீஸ் செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டேன். அதற்கு என் மனைவி ஆர்த்தியும் முழு மனதுடன் சம்மதித்தார்.

# தூத்துக்குடியில் பரபரப்பு : மயங்கி விழுந்த டி.ராஜேந்தர் – ரசிகர்கள் அதிர்ச்சி



**தூத்துக்குடி : டிச. 31,**

**நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சியின் போது நடிகர் டி.ராஜேந்தர் மயங்கி விழுந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.**

கடந்த டிசம்பர் 17, 18ம் தேதிகளில் திருநெல்வேலி, தூத்துக்குடி உட்பட தென்மாவட்டங்களில் கனமழை பெய்தது. இதனால், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். வீடுகள், விவசாய பயிர்கள் கடுமையாக சேதமடைந்தன. இந்நிலையில், தமிழக அரசு மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டு, மக்களை மீட்டது. மேலும், கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிவாரணமும், பாதிப்பு குறைவான பகுதிகளுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணம் அறிவித்து வழங்கப்பட்டு வருகிறது.

அதோடு, உயிர் சேதம் மற்றும் வீடு இழந்தவர்கள் என பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், அரசு தவிர்த்து அரசியல்வாதிகள், திரைப்படத்துறையினர் என பலரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கி வருகின்றனர். இன்று நெல்லை மாவட்டத்தில் நடிகர் விஜய் 1,500 பேருக்கு நிவாரண உதவி வழங்கினார். அதேபோல், நடிகரும், இயக்குநருமான டி.ராஜேந்தரும் தூத்துக்குடியில் நிவாரண உதவிகள் வழங்கினார். இதற்காக நேற்று காலை அவர் தூத்துக்குடி வந்தார்.

தொடர்ந்து, தூத்துக்குடி லெவிஞ்சிபுரம் பகுதியில் நேற்றுபிற்பகல் 3மணிஅளவில் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார். அப்போது, திடீரென மயக்கம் அடைந்து சரிந்து விழுந்தார். இதனால், பதற்றமான அவரது ரசிகர்கள், டி.ஆரை அருகில் இருந்த இருக்கையில் அமர வைத்தனர். பின்னர் முகத்தில் தண்ணீர் தெளித்து அவரை மயக்கத்தில் இருந்து மீட்டனர். இதையடுத்து, அவரை பத்திரமாக காரில் அழைத்துச் சென்றனர். இதன் காரணமாக அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# நடிகர் விஜய் சேதுபதி வயதை கூகுளில் தேடிய நடிகை



**சென்னை : டிச. 31,**

**நடிகை கத்ரினா கைஃப் நடிகர் விஜய்சேதுபதியின் வயதை கூகுள் செய்து பார்த்துள்ளதாகக் கூறியிருக்கிறார். இதற்கான காரணத்தையும் அவர் பகிர்ந்துள்ளார்.**

'ஜவான்' திரைப்படம், 'காந்தி டாக்ஸ்' வெப் சீரிஸுக்குப் பிறகு நடிகர் விஜய்சேதுபதி பாலிவுட்டில் கத்ரினா கைஃப்புடன் நடித்திருக்கும் 'மெரி கிறிஸ்துமஸ்' படம் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் படம் இந்தி மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் அடுத்த வருடம் ஜனவரி 12-ம் தேதி வெளியாக உள்ளது.

இப்படத்தை ஸ்ரீராம் ராகவன் இயக்கி இருக்கிறார். விநாயகர் பிரதிமா கண்ணன் மற்றும் டினு ஆனந்த் ஆகியோர் இந்தி வெர்ஷனில் நடித்திருக்க, தமிழில் ராதிகா சரத்குமார், சண்முகராஜா, கவின் ஜெபாபு மற்றும் ராஜேஷ் வில்லியம்ஸ் ஆகியோர் நடித்துள்ளனர். ராதிகா ஆப்தே மற்றும் அஸ்வின் கலாசேகர் இந்தி மற்றும் தமிழ் என இரண்டிலும் நடித்துள்ளனர். இப்படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியானது.

படத்தில் பணியாற்றிய அனுபவம் குறித்து நடிகை கத்ரினா கைஃப் கூறுகையில், "இந்தப் படத்தில் விஜய்சேதுபதியுடன் நடித்தது நல்ல அனுபவம். அவரை சில சமயம் சார் என்று கூப்பிடுவேன். பல சமயம் பெயர் சொல்லியே கூப்பிடுவேன். இதற்காக எங்களுக்குள் விவாதமே நடந்தது. பின்பு ஒரு முடிவெடுத்து அவர் வயதை கூகுள் செய்து பார்த்தேன்" என்றார் சிரித்துக் கொண்டே.

மேலும், "இயக்குநர் ஸ்ரீராம் ராகவன் சாருடன் பணியாற்றியது எனது கனவு நினைவானது என்று தான் சொல்ல வேண்டும். இவர் இயக்கத்தில் படப்பிடிப்பு தளத்தில் பணியாற்றுவது வேறு ஓர் உலகத்தில் நுழைந்ததைப் போலவே இருக்கும். இப்போது படத்தின் வெளியீட்டுக்காகவும் காத்திருக்கிறோம்" என்றார்.

# சாண்டியுடன் எனக்கு 2வது திருமணமா : கொந்தளித்த நடிகை காஜல் பசுபதி



**சென்னை : டிச. 31,**

**"சாண்டியை வாழவிடுங்க. இன்னும் ஏன் அவனை என் கூட வச்சுப் பேசறீங்க?" என நடிகை காஜல் பசுபதி கோபமாய் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நடிகை, டான்ஸர் என பன்முகம் கொண்டவர் நடிகை காஜல் பசுபதி. இவரும் சாண்டி மாஸ்டரும் முன்பு லிவ்வின் ரிலேஷனில் இருந்தனர். அதன் பிறகு, இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிந்தனர். சாண்டி, சில்வியா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

இந்த ஜோடிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு பிரிந்தாலும் சாண்டி மற்றும் அவரது குடும்பத்துடன் நட்புறவில்தான் இருக்கிறார் காஜல். சாண்டி வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று அவர்களுடன் எடுத்துக் கொள்ளும் புகைப்படத்தையும் பதிவிட்டு வருகிறார்.

அத்துடன் தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் பிக் பாஸ் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். தனியாக வசித்து வரும் காஜலிடம் ரசிகர்கள் எப்போது திருமணம் செய்து கொள்வீர்கள் எனக் கேட்டு வந்தனர்.

இந்த நிலையில்தான் அவர் மாலையுடன் திருமணக் கோலத்தில் இருக்கும் புகைப்படம் ஒன்றை சமீபத்தில் பகிர்ந்தார். அது பழைய புகைப்படமா என ரசிகர்கள் குழப்பம் அடைந்தனர். ஆனால், அது குறித்து காஜல் எதுவும் விளக்கம் கொடுக்கவில்லை. திடீரென நடந்த திருமணம் என்பதால் யாரையும் பெரிதாக அழைக்க முடியவில்லை எனச் சொல்லியிருந்தார்.

இந்த நிலையில் தான் சில செய்திகளில் சாண்டியும், காஜலும் ஒன்றாக இருக்கும் புகைப்படத்தைப் பகிர்ந்து, இரண்டாவது திருமணம் என செய்தி பகிரப்பட்டிருந்து.

இதற்கு காஜல், 'என்னய்யா, அதுக்குள்ள முடிந்த செகண்ட் மேரேஜ்னு போட்டு இருக்கு? இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே! எதுக்குஎல்லாத்துக்கும்சாண்டி படத்தைப் பயன்படுத்தறீங்க? அவனை வாழ விடுங்க!' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாறு உலகம்

# காசா மீது இஸ்ரேல் சரமாரி தாக்குதல்
## 24 மணி நேரத்தில் 200 பேர் பலி



**டெல் அவிவ் : டிச. 31,**
**காசா மீது இஸ்ரேல் ராணுவம் சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது. காசாவுக்குள் நுழைந்து ஹமாஸ் சுரங்கப்பாதை வளாகத்தை அழித்ததுள்ளது இஸ்ரேல். அதோடு கடந்த 24 மணி நேரத்தில் 200 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.**

இஸ்ரேல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகர் மீது கடுமையான குண்டுகளை வீசித்தாக்குதல் நடத்தியுள்ளது. காசாவுக்குள் நுழைந்து ஹமாஸ் சுரங்கப்பாதை வளாகத்தை அழித்துள்ளது இஸ்ரேல். அதோடு கடந்த 24 மணி நேரத்தில் 200 பேர் கொல்லப்பட்டனர். மேலும், பல உடல்கள் சுற்றுப்புறங்களின் இடிபாடுகளில் புதைந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. மத்திய காசாவில் உள்ள நுசிராட் முகாம் மீது இஸ்ரேல் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக மருத்துவர்கள் மற்றும் பாலஸ்தீன பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் ஹமாஸ் - இஸ்ரேல் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வாரின் வீடு ஒன்றின் அடித்தளத்தில் உள்ள சுரங்கப்பாதை வளாகத்தை அழித்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அல்-குத்ஸ் தொலைக்காட்சியில் பணிபுரிந்த பாலஸ்தீனஊடகவியலாளர் ஒருவர் தனது குடும்பத்துடன் சேர்ந்து கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது. இஸ்ரேலிய தாக்குதலில் 106 பாலஸ்தீன ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி தொடங்கிய ஹமாஸ் இஸ்ரேல் மீது ஹமாஸ் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. பாராக்ளைடர்கள் மூலம் இஸ்ரேலுக்குள் நுழைந்து கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம் சுட்டு வீழ்த்தினர். இதுவரை இஸ்ரேலியர்கள் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் காசாவில் இதுவரை 21,507 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அபுதாபியில் பிரம்மாண்ட இந்து கோயில்
## திறந்துவைக்க பிரதமர் மோடி ஒப்புதல்



**புதுடெல்லி : டிச. 31,**
**அபுதாபியில் பாப்ஸ் அமைப்பு சார்பில் கட்டப்பட்டு வரும் இந்து கோயிலை திறந்துவைக்க பிரதமர் நரேந்திர மோடி ஒப்புதல் அளித்துள்ளார்.**

ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபி அருகே முரேகாவில் 55 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் பிரம்மாண்ட இந்து கோயில் கட்டப்படுகிறது. கடந்த 2018 பிப்ரவரியில் இக்கோயில் கட்டுமானப் பணியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். உலகம் முழுவதும் சுமார் 1,200 இந்து கோயில்களை நிறுவி, பராமரித்து வரும் பாப்ஸ் (பிஏபிஎஸ்) அமைப்பு அபுதாபிகோயிலையும் கட்டி வருகிறது. இக்கோயிலில் கிருஷ்ணன், சிவன், ஐயப்பனின் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன.

கட்டுமானப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இக்கோயில் 2024 பிப்ரவரி 14-ம் தேதி, பக்தர்களின் வழிபாட்டுக்கு திறக்கப்பட உள்ளது. இந்நிலையில் சுவாமி ஈஸ்வர சந்திர தாஸ், பிரம்ம விகாரி தாஸ் உள்ளிட்ட கோயில் நிர்வாகிகள் கடந்த புதன்கிழமை டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்து, கோயில் திறப்பு விழாவில் பங்கேற்கவும் கோயிலை பக்தர்களின் வழிபாட்டுக்கு திறந்துவைக்கவும் அழைப்பு விடுத்தனர். இதனை ஏற்றுக்கொண்டதாக பாப்ஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "இந்தியாவின் புனிதத் தலங்களை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துவதில் பிரதமர் மோடி சிறப்பான பணியாற்றியுள்ளார். இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் அவரது கணிசமான பங்களிப்புகளை போற்றும் விதமாக, இந்த சந்திப்பின்போது மாலையும் காவி பொன்னாடையும் அணிவித்து பிரதமர் மோடி கவுரவிக்கப்பட்டார்.

அபுதாபி கோயிலின் கம்பீரமானவடிவமைப்பு மற்றும் சிற்ப வேலைப்பாடுகள் குறித்து பிரதமரிடம் சுவாமி பிரம்ம விகாரிதாஸ் எடுத்துரைத்தார். வரவிருக்கும் திறப்பு விழா, உலகளாவிய ஒற்றுமையை குறிக்கும் முக்கிய நிகழ்வாக இருக்கும் என்றும் அவர் விவரித்தார்.

அபுதாபி கோயில் கட்டுமானப்பணியில்ஈடுபட்டு வரும் அனைவருக்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்" என்று கூறப்பட்டுள்ளது. இக்கோயில் வளாகத்திற்காக ஐக்கிய அமீரக அரசு 17 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கியது. இதற்காக ஐக்கிய அமீரக அரசுக்கு பிரதமர் மோடி ஏற்கெனவே நன்றி தெரிவித்திருந்தார். ஐக்கிய அரபு அமீரகத்தில் இருக்கும் 35 லட்சம் இந்தியர்கள் இக்கோயில் திறக்கப்படும் தினத்தை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

# உக்ரைன் மீது சரமாரி தாக்குதல் நடத்திய ரஷ்யா – 31 பேர் பலி



**கீவ் : டிச. 31,**
**உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 18 மணி நேரம் தொடர் தாக்குதலில் ஈடுபட்டதால் அங்கு பலர் இடிபாடுகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இதுவரை 31 பேர் பலியாகி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

உக்ரைன் மீதான தாக்குதல் கடந்த சில தினங்களாக தணிந்திருந்த நிலையில், போர் மீண்டும் உக்கிரமடைந்துள்ளதால் அங்குள்ள மக்கள் மிகுந்த அச்சத்தில்உள்ளனர்.நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் சேர்வதற்கு எதிர்ப்புதெரிவித்த ரஷ்யா, அந்த நாடு மீது கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடுத்தது.

சிறிய நாடுதான் எளிதாக வீழ்த்தி விடலாம் என ரஷ்யா எண்ணியது. ஆனால், அமெரிக்காமற்றும்மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் அதனை உக்ரைன் முறியடித்து வருகிறது. இருந்த போதிலும் ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் பொருளாதார இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், உக்ரைன் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இதுவரை இல்லாதஅளவுக்குதாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியது. உக்ரைனின் தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கில் உள்ள நகரங்கள் மற்றும் கீவ் உட்பட பல பகுதிகளைக் குறிவைத்து தாக்குதல் நடைபெற்றது. 18 மணி நேரத்துக்கும் மேலாக இந்த தாக்குதல் நடைபெற்றது. இந்த தொடர் தாக்குதலில் ரஷ்யாராணுவம் 36 டிரோன்கள் மற்றும் 122 ஏவுகணைகளை அனுப்பியது.

போர் தொடங்கியதில் இருந்து ரஷ்யா நடத்திய மிகப்பெரிய வான்தாக்குதல் இதுவாகும். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உக்ரைன் மீது ரஷ்யா 96 ஏவுகணைகளை அனுப்பியதே இதற்கு முன்னர் பெரிய தாக்குதலாக இருந்தது. உக்ரைனின் பல பகுதிகள் இந்த தாக்குதலில் நிலைகுலைந்தன.

இதனால் அங்குள்ள மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் சுரங்கப்பாதை ரயில் நிலையம் உள்ளிட்டவை சேதமடைந்தன. இந்த கட்டிட இடிபாடுகளில் சிக்கி 31 பேர் பலியாகி உள்ளதாகவும், மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.ரஷ்யாவின் இந்த கோரத் தாக்குதலுக்கு பல்வேறுநாடுகளும்தங்களது கண்டனத்தைப் பதிவு செய்துவருகின்றன.

# போரை நிறுத்தினால் மட்டுமே பிணைக்கைதிகளை விடுவிப்போம் – இஸ்ரேலுக்கு ஹமாஸ் எச்சரிக்கை



**காசா : டிச. 31,**
**காசா மீது இஸ்ரேல் படைகள் தொடர் தாக்குதலை நடத்தி வரும் நிலையில் போரை நிறுத்தினால் மட்டுமே பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த அக்டோபர் 7ம் தேதி முதல் உக்கிரமான போர் நடைபெற்று வருகிறது. இஸ்ரேல் காசா மீது மேற்கொண்டு வரும் தீவிரமான தாக்குதலால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த மாதம் நடத்தப்பட்ட சிலநாட்கள் போர்நிறுத்தத்தின்போதுஇரு தரப்பிலும்பிணைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின்னர் மீண்டும் தாக்குதலை தொடங்கிய இஸ்ரேல் ராணுவம், உலக நாடுகள் போரை நிறுத்தக் கோரியும் கேட்காமல் தொடர்ந்து காசாவை தாக்கி வருகிறது. ஐநா சபை பலமுறை கண்டனம் தெரிவித்தும் போரை நிறுத்த முடியாது என இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலை எச்சரித்துள்ள ஹமாஸ், இஸ்ரேல் போரை நிறுத்தினால் மட்டுமே பிணைக்கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினை முழுமையாக ஒழிக்கும் வரை போர் நிறுத்தத்துக்கு வாய்ப்பே இல்லை என இஸ்ரேல் அறிவித்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலை எச்சரித்துள்ள ஹமாஸ், இஸ்ரேல் போரை நிறுத்தினால் மட்டுமே பிணைக்கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினை முழுமையாக ஒழிக்கும் வரை போர் நிறுத்தத்துக்கு வாய்ப்பே இல்லை என இஸ்ரேல் அறிவித்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

# காலிஸ்தான் ஆதரவாளர் லக்பீர் சிங் லண்டாவை பயங்கரவாதியாக அறிவித்தது மத்திய உள்துறை அமைச்சகம்




**புதுடெல்லி : டிச. 31,**
**கனடா வாழ் காலிஸ்தான் ஆதரவாளர் லக்பீர் சிங் லண்டாவை மத்திய உள்துறை அமைச்சர் பயங்கரவாதியாக அறிவித்தது.**

33 வயதான லக்பீர் சிங் லண்டா தடை செய்யப்பட்ட காலிஸ்தானி இயக்கத்தின் பாபர் கல்சா இண்டர்நேஷனல் அமைப்பைச் சேர்ந்தவர். இவர் மொஹாலியில் கடந்த 2021 ஆம் ஆண்டு பஞ்சாப் காவல்துறை தலைமையகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடையவராவார். அதேபோல் கடந்த டிசம்பர் 2022ல் சர்ஹாலி காவல் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் இவருக்குத் தொடர்புள்ளதாகத் தெரிகிறது.

பஞ்சாப்பைச் சேர்ந்த லண்டா கடந்த சில ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து வருகிறார். அங்கிருந்து இந்தியாவுக்கு எதிரான சதித்திட்டங்களைத் தீட்டி வருவதாக அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் பஞ்சாப் போலீஸார் லண்டாவுக்கு தொடர்புடைய 48 இடங்களில் அதிரடி சோதனை மேற்கொண்டனர். சோதனைக்கு முந்தைய நாள் லண்டாவின் ஆதராவளர் என்று கூறிய நபர் ஒருவர் பஞ்சாப் வாழ் வணிகரிடம் ரூ.15 லட்சம் கேட்டு தொலைபேசி வாயிலாக மிரட்டல் விடுத்தார். அதனைத் தொடர்ந்து அந்த நபர் கொடுத்த புகாரின் பேரில் போலீஸார் அடுத்தநாளே பல்வேறு இடங்களிலும் அதிரடி சோதனை நடத்தினர். சிலர் கைதும் செய்யப்பட்டனர். இந்நிலையில் லக்பீர் சிங் லண்டாவை தற்போது பயங்கரவாதியாக அறிவித்துள்ளது மத்திய உள்துறை அமைச்சகம்.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் பயங்கரவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்திகனடாவில்உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். கனடாவில் உள்ள இந்திய தூதரகம் முன்பு, கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

காலிஸ்தான் பயங்கரவாதிகளின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனடா அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில் கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவரும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, "இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன" என்று கூறினார். இதனை இந்தியா அபத்தமானது என்றும் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது. இந்தியாவின் மூத்த தூதரக அதிகாரிகையை கனடா வெளியேற்றிய நிலையில் அதற்குப்பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனடா தூதரை வெளியேறும்படி இந்தியா கூறியது. இவ்வாறாக மாறி மாறி குற்றச்சாட்டுகளோடு காலிஸ்தான் சர்ச்சையால் கனடா - இந்தியா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# லஞ்சம் கொடுப்பவருக்கும் கடுமையான தண்டனை : சீனாவில் அதிரடி சட்டம்



**சீனா : டிச. 31,**
**அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்போருக்கும் தண்டனை தரும் வகையில் சீனாவில் புதிதாக சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

சீன அதிபர் ஜி ஜின்பிங், தனிப்பட்ட நேர்மையை பேணுமாறு மக்களுக்கு அறிவுறுத்திய சில நாட்களுக்குப் பிறகு, ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பவர்களைத் தண்டிக்க சீனா தனது குற்றவியல் சட்டத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருத்தியது.

மார்ச் 1 முதல் நடைமுறைக்கு வரும் இந்த திருத்தப்பட்ட சட்டம், லஞ்சம் கொடுப்பவர்களுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது. இதன் மூலமாக பல நபர்களுக்கு, அல்லது முக்கிய தேசிய திட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு மீண்டும் மீண்டும் லஞ்சம் வழங்குபவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். இச்சட்டப்படி, நிர்வாகம், நீதித்துறை ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுப்பவர்கள் மற்றும் நிதி, சுகாதாரம், உணவு, கல்வி போன்ற துறைகளில் லஞ்சம் கொடுப்பவர்களுக்கும், கடுமையான தண்டனை வழங்கப்பட உள்ளது. இந்த புதிய குற்றவியல் சட்டத் திருத்தம் சீனாவின் உயர்மட்ட சட்டமன்றமான தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவால் நிறைவேற்றப்பட்டது.

சீனாவில் ஜி ஜின்பிங் தலைமையிலான ஆட்சி நடக்கிறது. இவர் அதிபராக பதவியேற்ற 2012ம் ஆண்டு முதல், ஊழலுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். சமீபத்தில், கட்சி நிர்வாகிகளிடம் தனிப்பட்ட முறையில் பேசிய அதிபர் ஜி ஜின்பிங், கட்சி நிர்வாகிகளின் உறவினர்கள் பெயர்கள், ஊழல் விவகாரத்தில் அடிபடக்கூடாது என்று எச்சரித்தார்.

# மெக்சிகோ பிறந்தநாள் கொண்டாட்டத்தில் துப்பாக்கிச்சூடு – 6 பேர் பலி, 26 பேர் காயம்



**மெக்சிகோ : டிச. 31,**
**மெக்சிகோவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலையில் நடைபெற்ற பிறந்த நாள் கொண்டாட்டத்தில் மர்மநபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர், 26 பேர் காயம் அடைந்துள்ளனர். இதில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.**

தென் அமெரிக்க நாடான மெக்சிகோவில் உள்ள சோனோரா மாகாணத்தின் சிடெட் ஒபெகன் என்ற நகரத்தில் 15வயது சிறுமி ஒருவரின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக பலரும்கூடியிருந்தனர். பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பலரும் உற்சாகமாக பார்ட்டியில் கலந்து கொண்டு இருந்தனர்.

அப்போது திடீரென அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். இந்த துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் நிகழ்விடத்திலேயே பலியானார். 26 பேர் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடினர். உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார், காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

மெக்சிகோவில் அதிகாலையில் நடைபெற்ற இந்த துப்பாக்கிச்சூடு அந்நாட்டை அதிரவைத்துள்ளது. இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக கடந்த 17ம் தேதி மெக்சிகோவில் நடந்த கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தின் போது நடந்த துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் கொல்லப்பட்டனர். கடந்த 2006ம் ஆண்டு முதல் இதுவரை மெக்சிகோ நாட்டில் 4 லட்சத்து 20 ஆயிரம் பேர் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு சம்பவங்களை தடுக்க மெக்சிகோவில் கடுமையான சட்டத்தை இயற்ற வேண்டும் என பலதரப்பிலிருந்து அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

# தீவிரவாதி ஹ:பிஸ் சயீத்தை பாகிஸ்தான் ஒப்படைக்க வேண்டும்
## வெளியுறவு துறை மீண்டும் வலியுறுத்தல்



**புதுடெல்லி : டிச. 31,**
**மும்பையில் கடந்த 2008-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 175 பேர் உயிரிழந்தனர், 300 பேர் காயம் அடைந்தனர்.**

அதன்பிறகு அல்-கய்தா அமைப்புக்கு ஐ.நா அறிவித்த தடை பட்டியலில் சயீத் பெயரும் இடம் பெற்றிருந்தது. ஹ:பிஸ் சயீத் பற்றிய தகவல் அளித்தால் 10 மில்லியன் டாலர் வெகுமதி அளிக்கப்படும் என அமெரிக்காவும் அறிவித்தது. நிதி நடவடிக்கை கண்காணிப்பு படை அமைப்பு (எப்ஏடிஎப்) சர்வதேச தீவிரவாத கருப்பு பட்டியலில், ஹ:பிஸ் சயீத்தை சேர்க்க முயற்சி எடுத்தது. இதை தவிர்க்கும் நடவடிக்கையாக, தீவிரவாத அமைப்புக்கு நிதியுதவி அளித்த வழக்கில் ஹ:பிஸ் சயீத்துக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் 31 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே கைதிகளை பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. இதனால், ஹ:பிஸ் சயீத்தை நீதிக்கு முன் கொண்டுவர பாகிஸ்தான் அரசு எதுவும் செய்யவில்லை. இந்நிலையில் அவர் மீது இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளை சந்திக்க, ஹ:பிஸ் சயீத்தை ஒப்படைக்கும்படி வெளியுறவுத்துறை அமைச்சகம் பாகிஸ்தான் அரசுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# இலங்கை பிரதமருடன் இந்திய தூதர் சந்திப்பு



**கொழும்பு : டிச. 31,**
**இலங்கைக்கான இந்திய தூதராக சந்தோஷ் ஜா கடந்த வாரம் பதவி ஏற்றார்.**

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவர் இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்த்தனேவை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து இருவரும் விரிவாக விவாதித்தனர்.

மேலும் எரிசக்தி துறையில் இந்தியாவின் அதிக முதலீடுகள், திரிகோணமலை எண்ணெய் சேமிப்பு தொட்டிகள், துறைமுகங்கள், ரெயில்வே மற்றும் பிற துறைகளில் முன்மொழியப்பட்ட கூட்டு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் வழிமுறைகளை ஆய்வு செய்தனர்.

# அதிபர் புதினை வெற்றிபெற விடமாட்டோம் பிரிட்டன் பிரதமர் உறுதி



**லண்டன் : டிச. 31,**
**உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ள ரஷியா, சமீபகாலமாக தீவிரமாக வான் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.**

பெரும்பாலான ஏவுகணைகள் உக்ரைன் பகுதியை தாக்குவதால் அதிக அளவில் சேதம் ஏற்படுகிறது. மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் படைகள் ரஷியாவுக்கு பதிலடி கொடுத்து வருகின்றன.

இதற்கிடையே, உக்ரைன் மீது மிகப்பெரிய வான்வழி தாக்குதலை ரஷியா நடத்தியிருக்கிறது. வியாழக்கிழமை பகலில் தொடங்கி இரவு வரை நீடித்த இந்த தாக்குதலின்போது 122 ஏவுகணைகள் மற்றும் 36 டிரோன்கள் ஏவப்பட்டன. இதில் பொதுமக்கள் 10க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். கீவ் உள்பட 6 நகரங்களைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், நாங்கள் விளாடிமிர் புதினை வெற்றி பெற விடமாட்டோம். உக்ரைனுடன் நாங்கள் தொடர்ந்து நிற்போம் என தெரிவித்தார்.

# அதிமுக அமைச்சர்கள் மீது நடவடிக்கை ஆளுநரை சந்தித்து வலியுறுத்தினார் முதல்வர்





# திருமயத்தில் விபத்து: சென்னை திருவள்ளூரை சேர்ந்த 5 பேர் பலி

# இந்தியாவிற்கு பிரதமர் செய்தது என்ன?: காங்கிரஸ் எம்பி கேள்வி




சென்னை / புதுக்கோட்டை | 31.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

காரன்வாலிஸ் , பிரித்தானிய இந்தியாவின் 3வது தலைமை ஆளுநர் (பி.1738) (இ.1805)



டி. எஸ். துரைராஜ் , தமிழக நாடக, திரைப்பட நடிகர் (பி.1910) (இ.1986)



நாஞ்சில் நாடன் , தமிழக எழுத்தாளர் (பி.1947)



ச. வே. சுப்பிரமணியன் , தமிழறிஞர் (பி.1929) (இ.2017)



## இன்றைய நினைவு நாள்

விஸ்வநாத தாஸ் , விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், நாடக கலைஞர் (பி.1886) (இ.1940)



கே. ஆர். ராமநாதன் , இந்திய இயற்பியலாளர் (பி.1893) (இ.1984)



ராஜ் நாராயணன் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி, விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1917) (இ.1986)



தொ. மு. சிதம்பர ரகுநாதன் , தமிழக எழுத்தாளர் (பி.1923) (இ.2001)

